# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 26

09.07.2023




சேமிக்கும் அளவுக்கு பணம் இல்லையா? 06

பிறரில் தங்கியிராத ஒரு வாழ்வியலை சமூகத்திற்கு... 12

இலாபம் தரும் இஞ்சி 16

# கடன் மறுசீரமைப்பு பிரேரணையும் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலமும்


தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

# கடன் மறுசீரமைப்புப் பிரேரணையும் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலமும்



**- பார்த்தீபன் -**

> “அரசாங்கத்தின் இலக்குகளை அடைவதற்குக் கடன்களைக் குறைக்க வேண்டும். அதற்காக அரசாங்கம் சர்வதேசரீதியாகவும், உள்நாட்டிலும் கையாண்ட பொறிமுறைகள் பெருமளவுக்கு வெற்றிபெற்றிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஊழல்களும், வீண்விரையங்களும் இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்துவதன் மூலமாக மட்டுமே இது போன்ற ஆபத்து மீண்டும் வராதிருப்பதை உறுதிப்படுத்த முடியும்.”

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புப் பிரேரணை நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதேவேளையில், ஊழல் எதிர்ப்புச் சட்டமூலமும் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. உத்தேச ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தில் பல விடயங்கள் திருத்தம் செய்யப்பட்டன. இந்நிலையில் சட்டமூலத்தை நிறைவேற்றாமல் தொடர்ந்து பிற்போடுவதற்கான காரணம் தனக்கு தெரியாமல் உள்ளதென என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறிய நிலையில், ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை வாக்கெடுப்பின்றி நிறைவேற்ற பிரதான எதிர்க்கட்சி இணக்கம் தெரிவித்த அதனையடுத்தே ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பின்றி, வாக்கெடுப்புக்கு விடப்படாமலேயே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை முக்கியமானதாகும். கடன் மறுசீரமைப்புப் பிரேரணையும், ஊழல் எதிர்ப்புச் சட்டமூலமும் ஒரு வகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. இலங்கை தனது கடன்களைக் கொடுக்க முடியாமல் வங்குரோந்து நிலைமைக்குச் சென்றமைக்கு இந்த நாட்டில் காணப்பட்ட அல்லது வழமையாகி விட்ட ஊழல்கள் பெரும் பங்கை வகித்திருக்கின்றன. அந்தப் பின்னணியில்தான் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டு, இப்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இந்த இரண்டு சட்டமூலங்களுக்கும் நாடாளுமன்றத்தின் ஆதரவைப் பெற்றிருப்பதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றொரு தடையையும் தாண்டியிருக்கின்றார். அதேவேளையில், என்னதான் விமர்சனங்கள், எதிர்ப்புக்கள் இருந்தாலும், பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற ஆதரவுடன் தனது ஆட்சியைத் தொடர முடியும் என்பதையும் அவர் நிரூபித்திருக்கின்றார். அதாவது, தற்போதைய நிலையில் ஸ்திரமான ஆட்சி ஒன்றை அவர் அமைத்திருக்கின்றார் என்றுதான் சொல்ல வேண்டும்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணை எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. பொதுஜன பெரமுனவின் கணிசமான உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்கள். இதனால் அறுபது வாக்குப் பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்ற முடிந்திருக்கின்றது.

எதிர்க்கட்சிகளின் கடுமையான விமர்சனங்கள், எதிர்ப்புக்களின் மத்தியில்தான் இந்தப் பிரேரணை சனிக்கிழமை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டது. பொது மக்களின் வங்கி வைப்புக்களில் கைவைக்கப்படும், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவும் ஆபத்துக்குள்ளாகும் என்ற வகையில் எதிர்க்கட்சிகள் பிரச்சாரங்களை முன்னெடுத்து வந்திருந்தன. ஆனால், அவ்வாறு எதுவும் இடம்பெறாது என்பது அரசாங்கத்தின் வாக்குறுதியாக இருந்து வந்திருக்கின்றது. அதனைத்தாம் காப்பாற்றிவிட்டதாக அரசாங்கம் சொல்லிக்கொள்கின்றது. ஆனால், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றில் சில பாதிப்புக்களை எதிர்காலத்தில் எதிர்கொள்ள வேண்டிவரலாம் எனப் பொருளாதார ஆய்வாளர்கள் சிலர் குறிப்பிடுவதைப் புறக்கணித்துச் சென்றுவிட முடியாது.

உள்நாட்டில் அரசாங்கம் பெற்றிருந்த கடன்களில் அதிகமான தொகை ஊழியர் சேமலாப நிதியத்திடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும்தான் பெறப்படடிருந்தது. உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பைச் செய்யும் போது அவற்றிற்குப் பாதிப்பு ஏற்படுமா என்ற அச்சம் உருவாகியிருந்தமைக்கு அதுதான் காரணம். இந்தக் கடன்மறுசீரமைப்பு தொடர்பான அரசின் திட்டம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. 21 நாள்களுக்குள் தமது சம்மதத்தை அந்த நிறுவனங்கள் தெரிவிக்க வேண்டும்.

உள்நாட்டில் அரசாங்கம் பல தரப்பினரிடமிருந்தும் கடன்களைப் பெற்றிருக்கின்றது. முக்கியமாக மத்திய வங்கி, அரச மற்றும் தனியார் வங்கிகள், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து திறைசேரி மூலமாகக் கடன்களைப் பெற்றிருக்கின்றது. இன்றைய நிலையில் இலங்

கையின் மொத்தக் கடன் 83 பில்லியன் டொலர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதில் சுமார் 42 பில்லியன் டொலர் உள்நாட்டுக் கடன்களாகும். இதில் சுமார் 19.5 பில்லியன் டொலருக்கே மறுசீரமைப் புச் செய்யப்படவிருக்கின்றது.

இந்தக் கடன் மறுசீரமைப்பைச் செய்யும் போது மூன்று வெவ்வேறான நடைமுறை களைப் பின்பற்ற முடியும். முதலாவது, பெற்றுக்கொண்ட தொகைக்கான வட்டி வீதத்தைக் குறைத்தல். இரண்டாவது, திருப்பிச் செலுத்துவதற்கான கால எல் லையை நீடித்தல். மூன்றாவது, பெற்றுக் கொண்ட கடனில் குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்யுமாறு கோருதல். அதாவது, ஒரு இலட்சம் ரூபாவைக் கடனாகப் பெற்றி ருந்தால், சுமார் 40 ஆயிரம் ரூபாவைத் தள்ளுபடி செய்யுமாறு கோரலாம். இதனால், மொத்தக் கடனின் தொகை குறைவடை யும்.

இவ்வாறு மூன்று விதமான நடைமுறை கள் பின்பற்றக்கூடியவையாக இருப்பதால், பொதுமக்களைப் பாதிக்காத வகையில் இதனை நடைமுறைப்படுத்த முடியும் என்ற வாதம் ஒன்றும் பொருளாதார நிபு ணர்களால் முன்வைக்கப்பட்டிருந்தது. அரசாங்கம் நடைமுறைப்படுத்தியிருக்கும் மறுசீரமைப்புத் திட்டத்தின்படி வங்கி களிலுள்ள பொதுமக்களின் வைப்புக்களுக்கு பாதிப்பு ஏற்படாது எனத் தெரிவிக்கப்படுகின் றது. அரச மற்றும் தனியார் வங்கிகளிட மிருந்து பெறப்பட்ட கடன்களுக்கு மறுசீர மைப்புச் செய்யப்படமாட்டாது என்று அறி விக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அறிவித்தல், வங்கிகளில் பெருமளவு தொகையை வைப்பில் வைத் துக்கொண்டு வங்கிகள் மூடப்பட்டிருந்த ஐந்து நாள்களாக அச்சத்துடன் காத்திருந்த வர்களுக்கு நிம்மதியைக் கொடுத்தி ருக்கின்றது. இலங்கையின் வரி வருமா னத்தில் 50 வீதமான பங்களிப்பை வங்கி கள்தான் செலுத்துகின்றன. அதாவது மக்க ளிடமிருந்து அரசாங்கத்துக்கு வரியைப் பெற்றுக்கொடுப்பதில் வங்கிகளுக்கு பிரதான பங்குள்ளது. இது போன்ற காரணிகளால், இலங்கையின் பொருளாதாரத்தில் வங்கி களின் பங்கு பிரதானமாக இருந்துள்ளது. இதனால், வங்கிகளை மேலும் நெருக்க டிக்குள்ளாக்கக்கூடாது என்பதில் அரசாங் கம் உறுதியாக இருந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

இதனைவிடச் சுமார் 5 கோடி 70 இலட் சம் வங்கிக் கணக்குகள் நாட்டில் காணப்படு கின்றன. மக்கள் நம்பிக்கையின் அடிப்ப டையில்தான் அந்த வங்கிக் கணக்குகளை வைத்திருக்கின்றார்கள். வதந்திகளின் அடிப்படையில் வங்கிக் கட்டமைப்புக்களில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காகத் தான் ஐந்து நாட்களுக்கு வங்கிகள் மூடப் பட்டன. அதேவேளையில், இந்த வங்கிக் கணக்குகளுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதிலும் அரசாங்கம் அவதானமாகவே இருந்துள்ளது.

ஆனால், மத்திய வங்கி அரசாங்கத்துக்குக் கொடுத்த கடன்களுக்கு மறுசீரமைப்புச் செய்யப்படவிருக்கின்றது. இது பொதுமக்க ளுக்குப் பெரும் சுமை எதனையும் ஏற்ப டுத்தாது எனக் கருதப்படுகின்றது.

அரசாங்கத்தினால் பெறக்கூடிய வரு மானத்தில் பெருந்தொகைக் கடன்களைச் செலுத்துவதற்கும், அதற்கான வட்டியைக் கொடுப்பதற்குமே போதுமானதாக இருந் துள்ளது. நாட்டின் அபிவிருத்தி - மக்கள் நலத் திட்டங்கள் தொடர்பில் சிந்திக்க முடி யாத நிலை இதனால்தான் ஏற்பட்டது. இதன் உச்சக் கட்டமாகத்தான் வங்குரோத்து நிலைக்கு நாடு வந்துவிட்டது என்ற அறி வித்தல் விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக இலங்கை வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரசல் பொன் சேக்கா தெரிவித்த கருத்துக்கள் தற்போதைய நிலை ஏன் ஏற்பட்டது, அரசாங்கம் இதனை எவ்வாறு கையாண்டது என்பதை விளக்கு கின்றது. அவர் சொன்னது இதுதான்

"இலங்கையால் தாங்க முடியாத அளவுக்கு கடன் வாங்க வேண்டியிருந்தது. 2022 ஏப்ரல் மாதமாகும்போது நாடு அதன் விளைவை உணரத் தொடங்கியது. இதனால் கடனைச் செலுத்த முடியாத நிலையில் இலங்கை இருப்பதாக மத்திய வங்கி ஆளுநரால் அறிவிக்க நேரிட்டது. தேவையான டொலரை எங்களால் ஈட்ட முடியவில்லை. வெளிநாடுகள் எங்களுக்கு கடன் தரவில்லை. இறுதியாகக் கடன் நெருக்கடி நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிய அளவில் பாதித்தது.

நாட்டிலுள்ள வர்த்தக உரிமையாளர் கள் மற்றும் தொழிலதிபர்களுக்கு நெருக் கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சிலர் தொழில்களை இழந்தனர். நாளடை வில் இது ஒரு சமூகப் பிரச்சினையாக மாறியது. அதன் பின்னரே, மக்கள் வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கினர். இறு தியாக, அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து சில நிவாரணங்களைப் பெற வேண்டியிருந்தது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களாக மொத்தமாக 84 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட வேண் டியுள்ளது. இதற்கான போதுமான பொரு ளாதாரம் இலங்கைக்குக் கிடையாது. அந்த கடனுக்கான வட்டி ஒவ்வொரு ஆண் டும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அந்த நேரத்தில்தான் பொருளாதார நெருக் கடி ஏற்பட்டது.

இந்த 84 பில்லியன் டொலர் கடனை மீளச் செலுத்த நாங்கள் சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதில், வெளிநாட் டுக் கடன்களை வழங்கிய நாடுகளுடன் உடன்பாடு எட்டப்பட வேண்டும். உடன் பாடு ஏற்பட்டவுடன், கடனைத் தள்ளுபடி செய்யலாம்.

இலங்கையிலுள்ள வங்கி வைப்பாளர் களைப் பாதிக்காத வகையில் உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம், நிதி அமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியன ஒத்துழைப்பு வழங் கியிருந்தன. உள்நாட்டுக் கடனை மறு சீரமைப்பதில் வைப்பாளர்களுக்கு இழப்பு அல்லது பாதிப்பு ஏற்படாது என்று நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம்.

மேலும் ஓய்வூதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியை செலுத்துவதற்குப் பெரு மளவான பிணைமுறிகள் பயன்படுத் தப்பட்டுள்ளன. இதற்கு மாற்று தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று வட்டி விகிதத்தைக் குறைப்பது. மற் றொன்று கடனை மீளச் செலுத்துவதை ஒத்திவைப் பது. இதன் காரணமாக, ஊழி யர்களின் EPF/ETF மற்றும் ஏனைய நிதி யங்களில் உள்ள பணம் பாதுகாக்கப்படு கிறது.

பணவீக்கத்தால் ஊழியர் நிதியங்க ளுக்கு அரசு வழங்கும் வட்டி வருமானம் அதிகமாக உள்ளது. இருப்பினும், வட்டி வருமானத்தின் இந்தப் பிரச்சினை பங்க ளிப்பு நிதிகளை மட்டுமே பாதிக்கிறது.

எனவே, ஊழியருக்கு எந்த நஷ்டமும் ஏற்படாது. அனைத்துப் பணத்தையும் இழப்பதற்குப் பதிலாக, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் மூலம் இந்த மட்டத்திலா வது பணத்துடன் குறிப்பிடத்தக்க வட்டி யைப் பெறுவது மகிழ்ச்சியான விடயமா கும்.

இந்நிலையில் பொருளாதார நெருக்க டிக்குத் தீர்வு காணப்பட்ட பிறகு நாட்டில் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகிப் பணவீக்கம் குறையும்.

இத்திட்டத்தின் மூலம் நாடு பல பொரு ளாதார நன்மைகளைப் பெறும். நாட்டுக் குத் தேவையான பொருட்களையும் மருந் துப் பொருட்களையும் எளிதாகப் பெறலாம். மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கி றது. அந்த நிலையை அடைய நாம் சில தியாகங்களைச் செய்ய வேண்டும். இல் லையேல் நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குவதைத் தடுக்க முடி யாது" என்று அவர் கூறியிருக்கின்றார்.

அரசாங்கத்தின் இலக்குகளை அடை வதற்குக் கடன்களைக் குறைக்க வேண்டும். அதற்காக அரசாங்கம் சர்வதேசரீதியாக வும், உள்நாட்டிலும் கையாண்ட பொறி முறைகள் பெருமளவுக்கு வெற்றிபெற்றி ருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஊழல்க ளும், வீண்விரையங்களும் இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்துவதன் மூலமாக மட்டுமே இது போன்ற ஆபத்து மீண்டும் வராதிருப்பதை உறுதிப்படுத்த முடியும். இதற்கு அரசாங்கம் தற்போது நடை முறைக்குக் கொண்டுவந்திருக்கும் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் துணைபுரியும் என்று நம்பலாம்.

**மின்மடல் :** tamilseconomy@gmail.com
**தொலைபேசி :** 0764438620

# கடன் மறுசீரமைப்பு?

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணை எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. பொதுஜன பெரமுனவின் கணிசமான உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்கள். இதனால் அறுபது வாக்கு பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்ற முடிந்திருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்மூலமாக மற்றொரு தடையையும் தாண்டியிருக்கின்றார்.

எதிர்க்கட்சிகளின் கடுமையான விமர்சனங்கள், எதிர்ப்புக்களின் மத்தியில்தான் இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. பொது மக்களின் வங்கி வைப்புக்களில் கைவைக்கப்படும், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவும் ஆபத்துக்குள்ளாகும் என்ற வகையில் எதிர்க்கட்சிகள் பிரச்சாரங்களை முன்னெடுத்துவந்திருந்தன. ஆனால், அவ்வாறு எதுவும் இடம்பெறாது என்பது அரசாங்கத்தின் வாக்குறுதியாக இருந்து வந்திருக்கின்றது.

உள்நாட்டில் அரசாங்கம் பெற்றிருந்த கடன்களில் அதிகமான தொகை ஊழியர் சேமலாப நிதியத்திடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும்தான் பெறப்பட்டிருந்தது. உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பை செய்யும் போது அவற்றிற்குப் பாதிப்பு ஏற்படுமா? என்ற அச்சம் உருவாகியிருந்தமைக்கு அதுதான் காரணம். இந்தக் கடன் மறுசீரமைப்பைச் செய்யும்போது மூன்று வெவ்வேறான நடைமுறைகளைப் பின்பற்ற முடியும். முதலாவது, பெற்றுக்கொண்ட தொகைக் கான வட்டி வீதத்தைக் குறைத்தல். இரண்டாவது, திருப்பிச் செலுத் துவதற்கான கால எல்லையை நீடித்தல். மூன்றாவது, பெற்றுக் கொண்ட கடனில் குறிப்பிட்ட தொகையைத் தள்ளுபடி செய்யுமாறு கோருதல்.

இவ்வாறு மூன்று விதமான நடைமுறைகள் பின்பற்றக்கூடியவையாக இருப்பதால், பொதுமக்களைப் பாதிக்காத வகையில் இதனை நடைமுறைப்படுத்த முடியும் என்ற வாதம் ஒன்றும் பொருளாதார நிபுணர்களால் முன்வைக்கப்பட்டிருந்தது. அரசாங்கம் நடைமுறைப்படுத்தியிருக்கும் மறுசீரமைப்புத் திட்டத்தின்படி உடனடியாக அல்லது நேரடியாக ஊழியர் சேமலாப நிதியத்துக்கோ, வங்கிகளிலுள்ள பொதுமக்களின் வைப்புக்களுக்கோ பாதிப்பு ஏற்படாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தினால் பெறக்கூடிய வருமானத்தில் பெருந்தொகை கடன்களைச் செலுத்துவதற்கும், அதற்கான வட்டியைக் கொடுப்பதற்குமே போதுமானதாக இருந்துள்ளது. நாட்டின் அபிவிருத்தி – மக்கள் நலத் திட்டங்கள் தொடர்பில் சிந்திக்க முடியாத நிலை இதனால்தான் ஏற்பட்டது. இதன் உச்சக் கட்டமாகத்தான் வங்குரோத்து நிலைக்கு நாடு வந்துவிட்டது என்ற அறிவித்தல் விடுக்கப்பட்டது. அரசாங்கத்தின் இலக்குகளை அடைவதற்கு கடன்களைக் குறைக்க வேண்டும். அதற்காக அரசாங்கம் சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டிலும் கையாண்ட பொறிமுறைகள் வெற்றி பெற்றிருக்கின்றன. ஊழல்களைக் களைந்து நாட்டை முன்னேற்றுவதற்கு இத்தருணத்திலாவது உறுதிபூணுவது அவசியம்.!

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## தொடர்பாடலின் முக்கியத்துவம்

உங்களை உயர்த்திக்கொள்ள அவசியமாகவுள்ள தொடர்பாடல் என்ற தலைப்பில் கடந்த வாரம் வெளியான கட்டுரை வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மட்டுமன்றி அனைத்துத் தரப்பினருக்கும் மிகவும் அவசியமான ஒன்றாகவே இருக்கின்றது. எம்மை உயர்த்திக்கொள்வதற்குத் தொடர்பாடல் எந்தளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதைக் கட்டுரையாளர் தெளிவாக விளக்கியிருந்தார். இது போன்ற சுயமுன்னேற்றத்துடன் தொடர்பான கட்டுரைகளை உங்களுடைய வாரஇதழில் மட்டும்தான் பார்க்க முடிகின்றது. அதேபோல சமூக ஊடகங்களில் கொட்டிக்கிடக்கும் வேலைகள் என்ற கட்டுரையும் அருமையாகவும் இளைய தலைமுறையினருக்குப் பயனுள்ளதாகவும் இருந்தது.

**எம்.இருதயநாதன், இளவாலை**

●●●

## பொருளாதார அச்சுறுத்தல்

பொருளாதாரத்தை அச்சுறுத்தும் மனிதவள வெளியேற்றம் என்ற சுவாமிநாதன்சர்மா எழுதிய கட்டுரை இன்றைய காலகட்டத்துக்கு மிகவும் பொருத்தமானதாக இருந்தது. தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாகப் படித்த பெருந்தொகையானோர் நாட்டைவிட்டு வெளியேறுவதால் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பாதிப்புக்களைத் தெளிவாக வெளிப்படுத்துவதாக இந்தக் கட்டுரை அமைந்திருந்தது. அத்துடன், சிக்கனம் தொடர்பான தமிழ்க்கவி அம்மா எழுதியிருக்கும் கட்டுரையும், சிறப்பானது. சாதாரண மக்களுக்குச் சிக்கனத்தின் முக்கியத்துவத்தை அவர் விளக்கியிருந்தார்.

**மங்களேஸ்வரி, நல்லூர், யாழ்ப்பாணம்**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!
அனுப்பிவைக்க வேண்டிய முகவரி –

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

-------------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ------------------------------------------------
**முகவரி** - ------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------
**சந்தாக் காலம்** - ------------------------------------------
**செலுத்திய தொகை** - ----------------------------------
**செலுத்திய திகதி** - ----------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,52,800 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,66,000 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** ஆடைத் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டிருப்பதால், பெருந்தொகையானவர்கள் வேலை இழக்கும் ஆபத்து இருப்பதாக செய்தி ஒன்று வெளியாகியிருந்தது. உண்மை நிலை என்ன?

**எம்.மேகலா,**
**தலவாக்காலை**

**பதில் -** உண்மைதான். இது பொருளாதாரத்தில் அதிகளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒன்றுதான். பொருளாதார நெருக்கடியின் தாக்கம் காரணமாக இலங்கையில் நிறுவப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் மொத்த உற்பத்தியில் இருபத்தைந்து சதவீதத்துக்கும் குறைவான உற்பத்தியே இடம் பெறுவதாக அண்மைய புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு அதிகளவிலான அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் தொழிற்றுறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பான ஒன்றிணைந்த ஆடை உற்பத்தியாளர் ஒன்றியம் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்ததாக நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் இது தொடர்பான தகவல்களைத் தெரிவித்திருக்கின்றது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினால் இலங்கையில் அமைக்கப்பட்டிருந்த ஆடைத்துறையில் உள்ள பல தொழிற்சாலைகள் தமது தொழிற்சாலைகளை மூடிவிட்டு வெளிநாடுகளில் தமது கைத்தொழில்களை ஆரம்பித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மூலப்பொருளுக்கான வரிகள் மற்றும் மின்சாரக் கட்டணம் காரணமாகச் செலவுகள் அதிகரித்தல் காரணமாகச் சர்வதேச சந்தையில் அவர்களின் போட்டித்தன்மை வெகுவாகக் குறைந்துள்ளதுடன், புதிய கட்டளைகளைப் பெறுவதும் மிகக் கடுமையாகக் குறைந்துள்ளதாகவும் இத்தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இத்தொழில் சுமார் மூன்றரை இலட்சம் நேரடி வேலை வாய்ப்புகளையும், சுமார் மூன்று இலட்சம் பேர் மறைமுக வேலை வாய்ப்புகளையும் நாட்டுக்கு வழங்கியுள்ளமையும் தெரியவந்துள்ளது. மேலும் பல பில்லியன் பெறுமதியான பெறுமதி சேர் வரியைத் திருப்பிச் செலுத்தாமையால் தாம் எதிர்கொண்டுள்ள சிரமங்கள் குறித்தும் ஆடை உற்பத்தியாளர்கள் முறையிட்டுள்ளனர்.

அதிகளவுக்குப் பெண்களுக்கான வேலை வாய்ப்பைப் பெற்றுத்தரும் ஒரு தொழில்துறையாக பிரேமதாஸவின் காலத்தில் ஆடை உற்பத்தித் தொழில்துறை வளர்ச்சியடைந்தது.

ஆடைத்தொழிற்றுறையின் ஊடாக நாட்டுக்கு பெருமளவில் அந்நியசெலாவணி கிடைத்தது. கொரோனா, பொருளாதார நெருக்கடி இத்துறையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மூலப்பொருட்கள் இறக்குமதி, முடிவுப் பொருள் ஏற்றுமதியில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளே, இத்துறை பின்னடைந்தமைக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது.



## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 280/= |
| உருளைக்கிழங்கு | - 180/= |
| பச்சைமிளகாய் | - 700/= |
| தக்காளி | - 450/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 300/= |
| கோவா | - 320/= |
| கரட் | - 400/= |
| பூசணி | - 140/= |
| புடோல் | - 200/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 380/= |
| பெரிய வெங்காயம் | - 140/= |
| பாவற்காய் | - 600/= |
| வெண்டிக்காய் | - 300/= |
| கருணைக்கிழங்கு | - 200/= |
| பயற்றங்காய் | - 450/= |
| லீக்ஸ் | - 420/= |
| பீற்றூட் | - 420/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 800/= |
| போஞ்சி | - 550/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 199/= |
| கனடா டொலர் - | 224/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 324/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 220/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 380/= |
| சுவிஸ் பிராங் - | 331/= |
| அமெரிக்க டொலர் - | 300/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 221/= |
| கனடா டொலர் - | 238/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 343/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 234= |
| ஸ்ரோலிங் பவுண் - | 401/= |
| சுவிஸ் பிராங் - | 353/= |
| அமெரிக்க டொலர் - | 315/= |

# சேமிக்கும் அளவுக்கு பணம் இல்லையா?



சேமிக்க வேண்டியது அவசியம் என்பது புரிகிறது. ஆனால், சேமிக்கும் அளவுக்கு பணம் மிச்சமாவதில்லையே! என்ன செய்ய என்று கேட்பார்கள் சிலர்.

'கார் பார்க்கிங்' இடங்களைப் பார்த்திருக்கிறோம். நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் கார்களில் சிலவற்றின் முன்பக்கம் கண்ணில்படும். சிலவற்றின் பின்புறம் தெரியும்.

வண்டியைப் பார்க்கிங்கில் நிறுத்தும்போது சிலர், காரை ரிவர்ஸ் எடுத்துச் சற்று சிரமப்பட்டுப் பின்புறமாக நுழைத்து நிறுத்திவிட்டுப் போவார்கள். அப்படி நிறுத்தப்பட்ட வண்டிகளின் முன்பக்கம் சாலையை எதிர்கொண்டு நிற்கும்.

வேறு சிலர், வண்டியை கிடைக்கிற இடத்தில் அப்படியே சுலபமாக நேராக நுழைத்து நிறுத்திவிட்டுக் கிளம்பிவிடுவார்கள். அப்படிப்பட்ட வண்டிகளின் பின்புறம் சாலைப்பக்கம் இருக்கும்.

திரும்ப வந்து வண்டியை எடுக்கும்போது இந்த இருசாராரில் எவருக்கு சுலபமாக இருக்கும்? ஏற்கெனவே ரிவர்ஸ் எடுத்து, வண்டியை முன்புறம் வெளியே தெரியுமாறு விட்டவருக்குத்தானே!

வந்ததும் ஏறியமர்ந்து அவர்களால் வண்டியை ஓட்டிச் செல்ல முடியும். மற்ற வகையினர் வண்டியை நிறுத்தியபோது சிரமப்படாமல் அப்படியே நுழைத்தனர். ஆனால், திரும்ப எடுக்கும்போது அவர்கள் அவசியம் ரிவர்ஸ் எடுத்துத்தான் வெளியே வரமுடியும்.

வண்டிகளைக் கொண்டுவந்து நிறுத்தியபோது அவர்கள் அனைவருக்குமே சமஅளவு நேரம் இருந்ததாக, வேறு பரபரப்பு ஏதுமில்லை என்று வைத்துக் கொண்டால். இந்த இரு சாராரின் அணுகுமுறைகளை எப்படி விவரிக்கலாம்?

முதல்சாரார் வண்டியைத் திரும்ப எடுக்கும் நேரம் தங்களுக்கு வசதியாக இருக்க வேண்டும் என்று விரும்பி, அதற்காக முன்கூட்டியே சிறிது நேரம் செலவு செய்து அந்த வேலையை முடித்துவிட்டுப் போகிறார்கள்.

மற்றொரு வகையினர், "எடுக்கும்போது பார்த்துக்கொள்ளலாம். இப்போதைக்கு ஏன் சிரமப்படனும்" என்று, அவர்கள் எப்படியும் செய்தாக வேண்டிய ரிவர்ஸ் எடுக்கும் வேலையைச் செய்யாமல் தள்ளிப் போடுகிறார்கள்.

யாருக்குத் தெரியும், திரும்ப வந்து எடுக்கும் நேரம் அவர்களுக்கு அவசரமானதாக இருக்கலாம். அருகில் நிறுத்தப்பட்டிருக்கும் மற்ற வண்டிக்காரர்களும், திரைப்படம் முடிந்து வெளியே வரும் நேரம் போலப் பலரும் அவசரமாக வெளியேற முயற்சிக்கலாம். அவர் வண்டியை எடுப்பது சிரமம் ஆகலாம்.

வண்டியை விடும்போதே சிரமம் பாராமல் ரிவர்சில் விடுவது, முன் எச்சரிக்கை உணர்வு உள்ளவர்கள் செய்வது. இதனால் வேலை முடிந்து திரும்பி வரும் அதிக அயர்ச்சியான நேரத்தில் சிரமப்பட வேண்டியிருக்காது.

காரைப் பார்க் செய்யும்போதே, திரும்ப எடுக்கும்போது சிரமப்படாமல் வேகமாக எடுக்கக்கூடிய விதம் நிறுத்துவது எதற்கான எடுத்துக்காட்டு? இன்றைய வருமானம் குறைவாக இருந்தாலும் அதில் ஒரு பகுதியை வருங்காலத் தேவைகளுக்காக சேமிக்க வேண்டியதற்கான உதாரணங்கள்.

இப்போது சந்திக்கும் இன்னது என்று தெரிந்த நெருக்கடிகளைவிடப் பின்னால் வரக்கூடிய வாய்ப்பிருக்கும், அதன் தீவிரம் தெரியாத நெருக்கடிகள் குறித்துக் கூடுதல் எச்சரிக்கை தேவை.

இந்த எச்சரிக்கை உணர்வும் அணுகுமுறையும் நேர மேலாண்மைக்கு மட்டுமல்ல வருமானத்தின் ஒரு பகுதியை சேமிப்பதற்கும் பொருந்தும். 'வந்தா பாத்துக்கலாம்' என்பதுஹீரோத்தனமாக தெரியலாம். ஆனால், வருவதற்கு முன்னால் ஏற்பாடு செய்துகொள்வதே புத்திசாலித்தனம்.

வயதான பின், பணியில் இருந்து ஓய்வு, வருமானம் இல்லாத நிலை தவிர, கூடுதலாகக் கொஞ்சம் ஆரோக்கியத்திற்கும் சிரமம் என்கிற சூழ்நிலையில், கையில் பணம் இல்லாமல் முடியாது.

வேலைக்குப் போனதும் குறைவாக செலவுசெய்து ஓரளவாவது சேமிக்க வேண்டும். அதுசிலருக்கு சிரமமாக இருந்தாலும் சில ஆசைகளை தவிர்த்துப் பயன்படுத்தும் சிலவற்றின் அளவுகளைக் குறைத்து பணத்தைச் சேமித்தால், வாழ்க்கையின் பிற்பகுதியில் நிம்மதியாக வாழலாம்.

அது, வண்டியை விடும்போது ரிவர்ஸில் விடுவது போன்றது. அப்போதைக்கு சிறு வேலை. ஆனால் பிற்பாடுக்கு பெரும் உதவி.

**"வேலைக்குப்போனதும் குறைவாக செலவுசெய்து ஓரளவாவது சேமிக்க வேண்டும். அதுசிலருக்குச் சிரமமாக இருந்தாலும் சில ஆசைகளை தவிர்த்து, பயன் படுத்தும் சிலவற்றின் அளவுகளைக் குறைத்தும் பணத்தைச் சேமித்தால் வாழ்க்கையின் பிற் பகுதியில் நிம்மதியாக வாழலாம்."**

- வள்ளியப்பன் -




## வரி விளம்பரம் — classified advertisement

### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

## classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

-------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

-------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

-------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும். 0778412785

-------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும் 0766996628

-------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.

தொடர்புகளுக்கு - 077 6566508.

-------------------------------------




### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு 0777435557

-------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

-------------------------------------



### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை - 0772034807

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

-------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

-------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும். 0775652282

-------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.

Krishnapillai Karan - 0773853765

-------------------------------------



### கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.


தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

-------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம்கற்பிக்கப்படுகிறது. - 0772469113



# பொருண்மியம் விருதுகள் - 2023



எமது நாட்டின் பொருளாதாரப் பங்காளர்களாய் இருக்கும் தொழில் முயற்சியாளர்கள், மற்றும் கண்டுபிடிப்பாளர்களைக் கௌரவித்து பெருமைப்படுத்தும் நோக்குடன் "கிரீன் மீடியா" நிறுவனத்தின் தமிழர் பொருண்மியம் வார இதழ் சிறப்பு விருதுகளை வழங்கவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தமிழர் பொருண்மியம் நடத்தும் "கோடைக் கொண்டாட்டம்" நிகழ்வில் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ் விருதுகளை பெற்றுக்கொள்ள தகுந்தவர்கள் என்று நீங்கள் கருதும் தொழில் முயற்சியாளர்களை, அவர்கள் குறித்த சிறிய குறிப்போடு நீங்களே எங்களுக்கு சிபார்சு செய்யலாம்.

இதற்காக நீங்கள் செய்யவேண்டியது இதுதான். நீங்கள் சிபார்சுசெய்யும் தொழில் முயற்சியாளர் அல்லது கண்டுபிடிப்பாளரின்.

- பெயர்
- முகவரி
- மேற்கொள்ளும் தொழில் முயற்சி
- தொலைபேசி இலக்கம்
- விருதுக்காக நீங்கள் சிபார்சு செய்பவர் பற்றியதான சிறிய குறிப்பு என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

அத்துடன் உங்கள் பெயர், தொடர்பிலக்கம் என்பவற்றையும் தெரியப்படுத்துங்கள்.

## பொருண்மியம் சிறப்பு விருதுகள் பின்வரும் பிரிவுகளில் வழங்கப்படும்

1. சுய தொழில் முனைவோர் விருது
2. இளம் தொழில் முனைவோர் விருது
3. சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் விருது

உணவு உற்பத்தி, பாரம்பரிய கைத்தொழில்கள் (நெசவு, நூல் துணிகள், வாழை நார் உற்பத்தி, பனம்பொருள் உற்பத்தி போன்றன)
குடிசைக்கைத்தொழில்கள் (கைவினைப்பொருட்கள், ஆடை அணிகலன், பாதணிகள், சவர்க்காரம், போன்றன)

4. சிறந்த கண்டுபிடிப்பாளர் விருது

கண்டுபிடித்த உபகரணம் தற்போது பொதுப் பாவனையில் இருக்க வேண்டும். அத்துடன் எமது பொருளாதாரத்தை வளர்ப்படுத்துவதற்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும்.

5. பெருந்தொழில் முயற்சியாளர் விருது

பிரதேச சபை மற்றும் மாவட்ட/அல்லது கம்பனி பதிவுகளை கொண்டிருக்க வேண்டும்.

சமூக அக்கறை மற்றும் சமூகத் தொண்டுகள் மேலதிக தகைமையாக கருதப்படும்.
நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 20.07.2023**

கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் தகவல்களை அனுப்ப முடியும் - Tamilseconomy@gmail.com

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்.
**0777276949**

# நாணயப் பெறுமானத்திற்கான கணக்காய்வு





AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கை அரசாங்கச் செலவினங்களின் பின்னணியில் நாணயப் பெறுமானத்திற்கான கணக்காய்வுகளை நடத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

சமீப ஆண்டுகளில் பொது நிதியின் சரியான பயன்பாடு ஒரு மிகப்பெரிய கேள்விக் குறியாகவும் கவலையாகவும் மாறியுள்ளது. மேலும், இந்த நிதிகளின் ஒதுக்கீடு மற்றும் பயன்பாட்டில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் செயற்றிறனை உறுதி செய்வதில் நாணயப் பெறுமானத்திற்கான கணக்காய்வு மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

'நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வு' என்பது ஒரு விரிவான மதிப்பீட்டுக் கருவியாகச் செயற்படுகிறது. இது அரசாங்கச் செலவுகள் குறைந்த செலவில் விரும்பிய விளைவுகளை அடைகிறதா என்பதை ஆய்வு செய்கிறது. அரசாங்கத் திட்டங்கள், சேவைகளின் திறன், செயற்றிறன் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை ஆராய்வதன் மூலம் இந்தத் தணிக்கைகள் பொது முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஒட்டுமொத்த மதிப்பின் சிறந்த தரவுகளினை வழங்குகின்றன.

இலங்கையில் நிலையான அபிவிருத்திக்கு நிதிசார் விவேகமும் பொறுப்பான நிதி முகாமைத்துவமும் இன்றியமையாததாக இருக்கும் நிலையில் பணத்திற்கான பெறுமதியானது கூடுதலான முக்கியத்துவத் தைப் பெறுகிறது. அவை விரயங்கள், மோசடி அல்லது தவறான நிர்வாகத்தின் எந்த நிகழ்வுகளையும் அடையாளம் காண உதவுகின்றன. இதன் மூலம் பொது வளங்களைப் பாதுகாக்கின்றன மற்றும் அரசாங்கத்தின் நிதி முடிவெடுப்பில் பொதுமக்களின் நம்பிக்கையை வளர்க்கின்றன.

மேலும், நாணயப் பெறுமானத்திற்கான கணக்காய்வுக் கொள்கை வகுப்பாளர்களை

**நாணயப் பெறுமானத்திற்கான கணக்காய்வானது பொது வளங்கள் அவற்றின் பயன்பாட்டிலிருந்து பெறப்பட்ட நன்மைகளை மேம்படுத்தும் விதத்தில் நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதே நேரம் பொதுத் துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வையும் ஊக்குவிக்கிறது**

மேம்படுத்துதல் அல்லது வளங்களின் மறு ஒதுக்கீடு தேவைப்படும் பகுதிகளை முன்னிலைப்படுத்துவதன் மூலம் தரவு சார்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது. திறமையின்மைகளைக் கண்டறிந்து செலவு-சேமிப்பு நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதன் மூலம் இந்தத் தணிக்கைகள் மேம்பட்ட சேவைகளை வழங்குவதோடு அரசாங்க செலவினங்களை மேம்படுத்துவதற்கும் பங்களிக்கின்றன.

நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வு என்பது ஒரு வகையான நிதிக் கணக்காய்வு ஆகும். இது அரசாங்க நிதி அல்லது பொது சொத்துக்கள் போன்ற பொது வளங்கள் திறமையாகவும் திறம்படவும் மற்றும் பொருளாதார ரீதியாகவும் பயன்படுத்தப்பட்டதா? என்பதை மதிப்பிடுவதில் கவனம் செலுத்துகிறது. நாணயப் பெறுமானத்திற்கான கணக்காய்வின் முதன்மை நோக்கமானது பொது வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள், செலவுகளை நியாயப்படுத்துகிறதா? என்பதைத் தீர்மானிப்பதாகும்.

அரசாங்க வசதிகளில் நாணய பெறுமானம் என்பது பொது மக்களுக்கு உறுதியான நன்மைகளை வழங்கும் உயர்தர சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பை வழங்குவதாகும். அதே நேரத்தில் பொது வளங்கள் பொறுப்புடனும் திறமையாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது. இதற்குச் செலவு-செயற்றிறன், சேவைத் தரம், வெளிப்படைத்தன்மை, நிலைத்தன்மை மற்றும் பொது ஈடுபாடு ஆகியவற்றுக்கு இடையே சமநிலை தேவைப்படுகிறது.

## பொது மக்களுக்கு அரசு வசதிகளில் நாணயப் பெறுமானம் என்றால் என்ன?

'அரசாங்க வசதிகளில் நாணய பெறுமானம்' என்பது பொது மக்களுக்குச் சிறந்த சேவைகள் மற்றும் நன்மைகளை வழங்க பொது வளங்கள் மற்றும் வரி செலுத்துவோர் பணம் திறமையாகவும் முறையாகவும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தைக் குறிக்கிறது. அதாவது அரசாங்கம் உயர்தரச் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வழங்குவதை உறுதி செய்யும் அதே நேரத்தில் நன்மைகளை அதிகப்படுத்துகிறது. மற்றும் செலவுகளைக் குறைக்கிறது.

அரசாங்க வசதிகளில் நாணயப் பெறுமதி அடைய பல காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. அவற்றுள் சில:

- செலவு-செயற்றிறன்: அரசாங்க வசதிகள் செலவு குறைந்த முறையில் கட்டப்பட்டு, இயக்கப்பட்டுப் பராமரிக்கப்பட வேண்டும். இது வளங்களின் ஒதுக்கீட்டை மேம்படுத்துதல், புதுமையான கொள்முதல் நடைமுறைகளைப் பயன்படுத்துதல் மற்றும் தேவையற்ற செலவுகளைத் தவிர்த்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.
- சேவையின் தரம்: பொது மக்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் உயர்தர சேவைகளை அரசு வசதிகள் வழங்க வேண்டும். அணுகல், நம்பகத்தன்மை, பாதுகாப்பு, தூய்மை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி போன்ற காரணிகள் இதில் அடங்கும்.
- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்: அரசாங்கங்கள் பொது நிதியைப் பயன்படுத்துவதில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்து அவற்றின் வசதிகளின் விளைவுகளுக்கும் செயற்றிறனுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். இது முறையான நிதி மேலாண்மை, வழக்கமான தணிக்கைகள் மற்றும் வளங்கள் திறமையாகவும் திறம்படவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வழிமுறைகளை உள்ளடக்கும்.
- நீண்ட கால நிலைத்தன்மை: பராமரிப்பு,

ஆயுள், ஆற்றல், திறன் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு அரசாங்க வசதிகள் நீண்ட காலக் கண்ணோட்டத்துடன் வடிவமைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட வேண்டும். இது விலையுயர்ந்த பழுதுபார்ப்புகளைத் தவிர்க்கவும், மற்றும் வசதிகள் செயற்படுவதை உறுதி செய்யவும், காலப்போக்கில் பொதுமக்களுக்கு பயனுள்ளதாகவும் இருக்கும்.

– பொது மக்களின் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பு: முடிவெடுக்கும் செயன்முறைகளில் பொது மக்களை ஈடுபடுத்துவது, மற்றும் அரசாங்க வசதிகளில் அவர்களின் உள்ளீட்டைப் பெறுவது சிறந்த விளைவுகளுக்கு பங்களிக்கும். பொதுமக்களின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளைப் புரிந்துகொள்வதன் மூலம் அரசாங்கங்கள் வளங்களை மிகத் திறம்பட ஒதுக்கலாம் மற்றும் அவர்கள் சேவைச் செய்யும் சமூகங்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப வசதிகளை உருவாக்கலாம்.

பொதுச் சேவைகளை நோக்கிய அரசு சேவைகளில் உள்ள பலவீனம் என்ன?

பொதுச்சேவைகளை நோக்கிய அரசாங்க சேவைகளில் பல குறைபாடுகள் இருக்கலாம். அவற்றுள் சில:

– அதிகாரத்துவம் மற்றும் திறமையின்மை: அரசு நிறுவனங்கள் பெரும்பாலும் அதிகாரத்துவக் கட்டமைப்புகள் மற்றும் தாமதமாக முடிவெடுக்கும் செயன்முறைகளால் பாதிக்கப்படுவதால் சேவை வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. அத்துடன் திறமையின்மையானது பொதுத் தேவைகளுக்குப் பதிலளிக்கும் தன்மையைத் தாக்குவதோடு குடிமக்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்துகிறது.

– பொறுப்புக்கூறல் இல்லாமை: பொதுச் சேவைகளில் பொறுப்புக்கூறலுக்கான தெளிவான வழிமுறைகள் இல்லாமல் இருக்கலாம். இதனால் அரசு அதிகாரிகளை மற்றும் நிறுவனங்களை அவர்களின் செயல்கள் அல்லது செயலற்ற தன்மைகளுக்குப் பொறுப்பாக்குவது கடினம். இது ஊழல், பாகுபாடு காட்டும் தன்மை மற்றும் வளங்களைத் தவறாகப் பயன்படுத்துதல் போன்றனவற்றிற்கு வழிவகுக்கும்.

– போதிய நிதியின்மை: அரசாங்க சேவைகள் போதிய நிதியில்லாமல் பாதிக்கப்படலாம். இது பொதுக் கோரிக்கைகளைத் திறம்பட நிறைவேற்றும் திறனைக் குறைக்கும். வரையறுக்கப்பட்ட வளங்கள் சேவைகளின் தரம் மற்றும் கிடைக்கும் தன்மையைப் பாதிக்கலாம். இது குடிமக்கள் மத்தியில் அதிருப்திக்கு வழிவகுக்கும்.

– வரையறுக்கப்பட்ட அணுகல்: சில பொதுச்சேவைகள் அனைத்து குடிமக்களுக்கும், குறிப்பாக கிராமப்புற அல்லது ஒதுக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு எளிதில் அணுகப்படாமல் இருக்கலாம். புவியியல் கட்டுப்பாடுகள், போதிய உட்கட்டமைப்பு அல்லது வரையறுக்கப்பட்ட முயற்சிகள் காரணமாக அணுகல் சிக்கல்கள் ஏற்படலாம்.

– வெளிப்படைத்தன்மை இல்லாமை: அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையே நம்பிக்கையை வளர்ப்பதற்கு வெளிப்படைத்தன்மை மிகவும் முக்கியமானது. அரசாங்கச் சேவைகள் வெளிப்படைத்தன்மை இல்லாதபோது எப்படி முடிவுகள் எடுக்கப்படுகின்றன? எப்படி வளங்கள் ஒதுக்கப்படுகின்றன? மற்றும் அவர்களின் தேவைகள் எவ்வாறு கவனிக்கப்படுகின்றன? என்பதைப் புரிந்துகொள்வது குடிமக்களுக்கு சவாலாகின்றது.

– ஒழுங்கமைப்பு / ஒருங்கிணைப்பு இல்லாமை: பல்வேறு அரசு நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டி போடுவதாலும், ஒழுங்கமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு இல்லாமையினாலும் வளங்களை வீணாக்குவதற்கும் செயற்றிறன் குறைவதற்கும் வழிவகுக்கும்.

– வரையறுக்கப்பட்ட குடிமக்கள் பங்கேற்பு: உள்ளடக்கிய நிர்வாகத்திற்கு அர்த்தமுள்ள குடிமக்கள் பங்கேற்பு நிச்சயம் அவசியம். இருப்பினும், முடிவெடுக்கும் செயன்முறைகளில் குடிமக்களை ஈடுபடுத்துவதற்கும், அவர்களின் கருத்துக்களை இணைப்பதற்கும் அரசாங்க சேவைகள் பெரும்பாலும் வழிமுறைகளைக் கொண்டிருக்கவில்லை. இது பொதுத் தேவைகள் மற்றும் விருப்பங்களுடன் முழுமையாக ஒத்துப்போகாத கொள்கைகள் மற்றும் சேவைகளுக்கு வழிவகுக்கும்.

– டிஜிட்டல் / எண்முறைப் பிளவு: அதிகரித்து வரும் டிஜிட்டல் உலகில் டிஜிட்டல் பிளவானது அரசாங்க சேவைகளை அணுகுவதில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கலாம். வரையறுக்கப்பட்ட இணைய அணுகல் அல்லது டிஜிட்டல் கல்வியறிவு உள்ளவர்கள் ஆன்லைன் சேவைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடலாம். மேலும், மக்கள் தொகையில் சில பிரிவினரை ஓரங்கட்டலாம்.

– புதுமை மற்றும் பின்பற்றும் திறன் இல்லாமை: புதிய தொழில்நுட்பங்கள், புதுமையான அணுகுமுறைகள் அல்லது மாறி வரும் சமூகத் தேவைகளுக்கு ஏற்ப அரசு சேவைகள் சில சமயங்களில் தாமதமாகலாம். இது திறமையான மற்றும் பயனுள்ள பொதுச் சேவைகளை வழங்குவதில் தடையாக இருக்கும்.

இந்தப் பலவீனங்கள் வெவ்வேறு அரசாங்க அமைப்புக்களிலும் வேறுபடலாம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சீர்திருத்தங்கள், கொள்கை மாற்றங்கள் மற்றும் குடிமக்கள் ஈடுபாட்டின் முன்முயற்சிகள் மூலம் இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் அடிக்கடி மேற்கொள்ளப்படவேண்டும்.

நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வுகள் பொதுவாக அரசு தணிக்கையாளர்கள் அல்லது தணிக்கை முகவர்களால் பொதுத் திட்டங்கள் அல்லது நிறுவனங்களின் செயற்றிறனை மதிப்பிடுவதற்காக நடத்தப்படுகின்றன. கணக்காய்வு செயன்முறை, கணக்காய்வு செய்யப்படும் திட்டங்கள் அல்லது செயற்பாடுகளில் பின்வரும் அம்சங்களை ஆராய்வதை உள்ளடக்கும்.

– பொருளாதாரம் (செலவுகளைக் குறைத்தல்)

– திறன் (கொடுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு வெளியீட்டை அதிகப்படுத்துதல்)

– செயற்றிறன் (இலக்குகளை அடைதல்)

நாணயப் பெறுமானத்திற்கான கணக்காய்வின் போது பின்வரும் காரணிகளை கணக்காய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர்

– திட்டமிடல் மற்றும் பட்ஜெட் / வரவு செலவுத் திட்டச் செயன்முறை

* கொள்முதல் நடைமுறைகள்
* செயற்பாட்டுத் திறன்
* இடர் முகாமைத்துவம்
* விரும்பிய முடிவுகளை அடைதல்

இவற்றின் மூலம் பொது வளங்கள் மிகவும் செலவு குறைந்த முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளனவா? மாற்று விருப்பங்கள் போதுமான அளவில் பரிசீலிக்கப்பட்டுள்ளனவா? எதிர்பார்த்த பலன்கள் எட்டப்பட்டுள்ளனவா? என அவை ஆய்வு செய்கின்றன.

நாணயப் பெறுமானத்திற்கான கணக்காய்வுகளின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் பொது அதிகாரிகள் / முடிவெடுப்பவர்களுக்குச் சிறந்த விழிப்புணர்வு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

* பொது வளங்களின் பயன்பாட்டை எவ்வாறு மேம்படுத்தல்?
* பொறுப்புணர்வை மேம்படுத்துதல்
* பணத்திற்கான மதிப்பை அதிகரித்தல்

பின்வருமாறு கணக்காய்வு அறிக்கைகள் பொதுத் திட்டங்களில் பங்களிக்க முடியும்.

* செலவு சேமிப்பிற்கான பகுதிகளைக் கண்டறிதல்
* செயற்பாட்டுத் திறனை அதிகரித்தல்
* ஒட்டுமொத்த செயற்திறனை மேம்படுத்தல்

மொத்தத்தில், நாணயப் பெறுமானத்திற்கான கணக்காய்வானது பொது வளங்கள் அவற்றின் பயன்பாட்டிலிருந்து பெறப்பட்ட நன்மைகளை மேம்படுத்தும் விதத்தில் நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதே நேரம் பொதுத் துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வையும் ஊக்குவிக்கிறது.

இலங்கை அரசாங்கச் செலவினங்களில் பணத்திற்கான மதிப்பின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் செயற்றிறனை உறுதி செய்வதன் மூலம் பொறுப்பான நிதி நிர்வாகத்தை மேம்படுத்துவதிலும் பொது நிதியிலிருந்து பெறப்பட்ட மதிப்பை அதிகரிப்பதிலும் இந்த நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை கொள்கை வகுப்பாளர்களுக்கு மதிப்புமிக்க நுண்ணறிவுகளுடன் வலுவூட்டுகின்றன. இது சிறந்த முடிவினை எடுப்பதற்கு வழிவகுப்பதுடன் இறுதியில் இலங்கையின் குடிமக்களுக்கு பலவகைகளில் நன்மை பயக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

# பிறரில் தங்கியிராத ஒரு வாழ்வியலை சமூகத்திற்கு பழக்கப்படுத்த வேண்டும்

நேர்கண்டவர் - ஞா.கவினி



## பஷன் பப்றிக் நிர்வாகி சிவராசா மேரியரோசறி

**"வீட்டு வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு கிடைக்கின்ற கொஞ்ச நேரங்கள் முழுவதையும் அர்ப்பணிப்போடு தொழில் மீது செலவிடும் எமது பெண்கள் அணிக்குச் சவால்கள் என்பது சாதனைக்கான படிகள் தான். உற்பத்தியைச் செய்வதிலும் பார்க்க மூலப் பொருட்களைக் கண்டடைவது தான் எமக்கு மிகப்பெரும் சவாலாக இருந்தது."**

இலங்கையின் பொருளாதாரத்தில் அதிக செல்வாக்குச் செலுத்தும் ஆடை வணிகத்தை சுய தொழிலாக தனது கையில் எடுத்து மூன்று வருடங்களாக வெற்றிகரமாக இந்தத் துறையில் பயணித்துக் கொண்டிருக்கும் பஷன் பப்றிக் நிர்வாகி சிவராசா மேரியரோசறியை இந்த வாரம் தமிழர் பொருண்மியம் வார இதழுக்காகச் சந்திக்கின்றோம்.

### ஆரம்பம்

2020 ஆம் ஆண்டு மிகச் சிறிய அளவில் பத்துப் பெண்களோடு ஆரம்பித்தது இந்தப் பயணம். ஹரிதாஸ் நிறுவனத்தின் தொழில் வழிகாட்டலின் கீழ்ப் பெறுக்கொண்ட பயிற்சிகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஊரில் உள்ள ஒரு பொதுக் கட்டிடத்தில் துணிகளுக்குக் கலரிட ஆரம்பித்தோம்.

சரியான மூலதனமோ அடிப்படைக் கட்டிட வசதிகளோ இல்லாத போதும் தன்னம்பிக்கையை மட்டும் கையில் பிடித்தபடி ஆரம்பித்தது எங்கள் பெண்கள் குழுவின் நம்பிக்கைப் பயணம். பப்ரிக் என்பது எங்களுக்குக் கொஞ்சம் புதிய விடயமாக தான் இருந்தது. தெற்கிலிருந்து வரும் பப்ரிக் ஆடைகளை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்து அணிந்து பழக்கப் பட்டவர்களுக்கு, நாங்களே அவற்றை உருவாக்குவது ஒரு புது அனுபவத்தை தந்தது.

உண்மையில் புதுமைகள் ஒவ்வொன்றும் மனதில் சந்தோஷத்தையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்த வல்லன. அன்றாட வீட்டுப் பணிகளோடு முடங்கிப் போயிருந்த பல பெண்களுக்குத் தன்னம்பிக்கையையும் உத்வேகத்தையும் இந்தத் தொழில் கொடுத்தது எனலாம்.

### சவால்களைத் தாண்டிய வெற்றி

ஆரம்பத்தில் இது ஒரு சவாலான விடயமாக இருந்தாலும் போகப்போக எங்கள் நம்பிக்கையை வலுப்படுத்தும் சொந்தத் தொழிலாக இந்தத் தொழில் மாறி இருக்கிறது. பயிற்சி பெற்ற பத்துப் பெண்களுக்கும் இன்று வரை சிறிய தொழில் வாய்ப்பை வழங்குவதோடு... நமது பொருட்களை நாமே உருவாக்குகிறோம் என்கின்ற தைரியத்தையும் கொடுத்திருக்கின்றது.

வீட்டு வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு கிடைக்கின்ற கொஞ்ச நேரங்கள் முழுவதையும் அர்ப்பணிப்போடு தொழில் மீது செலவிடும் எமது பெண்கள் அணிக்கு சவால்கள் என்பது சாதனைக்கான படிகள் தான். உற்பத்தியைச் செய்வதிலும் பார்க்க மூலப் பொருட்களை கண்டடைவது தான் எமக்கு மிகப்பெரும் சவாலாக இருந்தது. தலைநகருக்குச் சென்று புரியாத மொழிகளில் பேசி பொருட்களை லாபகரமாக பெறுக்கொள்வதும், அப்படி சிரமத்துடன் வேண்டிய பொருட்களை பத்திரமாக தொழில் கூடத்திற்கு கொண்டு வந்து சேர்ப்பதும் எமது பெண்களுக்கு சவாலாக இருந்தபோதிலும் சற்றும் சளைத்து விடாமல் தொடர்ந்து முயன்று கொண்டே இருந்ததுதான் எங்களது வெற்றிக்குக் காரணமாக இருந்தது என்று நினைக்கிறேன்.

கோவிட் காலங்களில் சடுதியாக ஏற்பட்ட விலையேற்றங்களும் எங்களை கொஞ்சம் நிலைகுலைய வைத்தாலும் நம்பிக்கையைக் கைவிடாது நாங்கள் பயணித்துக் கொண்டே இருந்தோம்.

இதன்போது ஏற்பட்ட நஷ்டங்கள் எங்களைப் பாதித்தபோது புலம்பெயர் தேசத்தில் இருந்த உறவுகள் எமக்கு கரம் கொடுத்தன.



அந்த இக்கட்டான காலங்களில் எங்கள் பெண்கள் குழுவின் உற்பத்திகளை ஆவலுடன் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களுக்கும் மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவிய புலம் பெயர் நண்பர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றிகளைச் சொல்ல வேண்டும். அவர்களால்தான் இந்த வெற்றி சாத்தியமாகியது.

## சந்தைப்படுத்தல்

எமது உற்பத்திகளைப் பொறுத்தவரை எப்போதும் வாடிக்கையாளர்களிடையே நல்ல கேள்வி இருக்கிறது. நாங்கள் குறிப்பிட்ட அளவு தொகைத் துணிகளையே தற்போது உற்பத்தி செய்து வருகின்றோம்.



அவற்றை உள்ளூரில் உள்ள வாடிக்கையாளர்களே விரும்பிக் கொள்வனவு செய்கின்றனர். எமது பொருட்களின் தரத்தை அறிந்த வாடிக்கையாளர்கள் வெளிநாடுகளுக்கு நமது உற்பத்திகளை எடுத்துச் செல்கின்றனர்.

சந்தைப்படுத்தலுக்கு எந்தவித சங்கடங்களும் இல்லாத போதும் கால நிலைக்கேற்ப மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாதது எமக்கு எப்போதும் பெரிய பிரச்சினையாகவே இருக்கிறது. எங்களுடைய நிலையத்தில் அதிகமான உற்பத்திகளை நாங்கள் செய்கின்ற போது சந்தைப்படுத்தலுக்கான இன்னும் ஒரு பொறிமுறையையும் நாங்கள் கண்டு பிடித்து விடுவோம் என்று நினைக்கிறேன். சந்தைப்படுத்தல் என்பது சவால்கள் நிறைந்தது தான்.


ஆனால் எங்கள் குழுவிற்குச் சவால்கள் ஒன்றும் புதிதல்ல. குடும்பம், சமூகம், தொழில், அரசியல் என்று பெண்கள் கடந்து வந்த சவால்கள் பல. அவையெல்லாம் எங்களை புடம் போட்டு வெற்றிக்கான பாதையில் வழி நடத்தி இருக்கிறது என்று நம்புகிறோம்.

## கனவு

இந்த நிறுவனத்தைப் பற்றி எனக்கு பெரிய கனவு இருக்கிறது. பத்துப் பேரோடு இயங்கி வரும் நமது தொழிற்சாலையில் இன்னும் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டும். இங்கே துணிகளை தெரிவு செய்பவர், வரை கலைஞர், சாயம் இடுபவர் என அனேக நுட்பமான வேலைகள் செய்வோர் இருக்கின்றன. அவற்றை பகுதி வாரியாக பிரித்து தொழிலை விருத்தி செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன்.

எமது தொழிலை விருத்தி செய்வதன் மூலம் எம்மைச் சுற்றியுள்ள பல பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவது மாத்திரம் அன்றி எனது சமூகத்தை தற்சார்புச் சிந்தனையுள்ள சமூகமாக உருவாக்கி விட வேண்டும் என்று விரும்புகிறேன். ஒவ்வொருவரும் தமக்கென்று ஒரு சொந்தத் தொழிலைத் தெரிந்து வைத்திருக்க வேண்டியது கட்டாயமாக இருக்கிறது.

சின்ன சின்ன விடயங்களுக்கும் பிறரில் தங்கியிராத ஓர் அழகான வாழ்வியலை



நாங்கள் எங்கள் சமூகத்திற்கு பழக்கப்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் தமக்கான அடிப்படை தேவைகளை தாமே நிவர்த்தி செய்து கொள்ளும் அளவிற்கு தம்மை வளர்த்துக்கொள்வதினூடு தன்னம்பிக்கையுள்ள ஒரு நல்ல சமுதாய மாற்றத்தை காண முடியும் என்று நம்புகிறேன் என்கிறார் பேஷன் பப்ரிக் உரிமையாளர் சிவராசா மரிய ரோசரி.





# மது எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

"கட்டி அணைக்கையிலே உள்ளம்தான் கள்வெறி கொள்ளுதடி" இது பாரதியார் பாடிய ஒரு பாடலின் அடி. கண்ணம்மாவை நினைந்து பாடிய இந்தப்பாடலில் அவர் அவளைப்பற்றிய அல்லது அவளோடு குலாவிய அந்த இனிமைகளை வருணிக்கும் போது. அவளைக் கட்டி அணைக்கும் போது தனக்கு ஏற்படும் உணர்வை இவ்வாறு கூறுகிறார். சின்னஞ்சிறு பெண்ணை அணைக்கும்போது எல்லோருக்கும் வரும் புளகாங்கித உணர்வை அவர்கள் வெறி என்கிறார். 'கள்' சாமானிய மக்களின் சோமபானம்.

எமது வாழ்க்கையில் கள் ஒரு முக்கியமான இடத்தில் இருக்கிறது. அந்தப் பனை மரத்திலிருந்து வடியும் கள்ளை மதுசாரமில்லாமல் கருப்பணியாகவும் இறக்கி அதில் பனங்கட்டிப் பனை கற்கண்டு என பல்வேறு வடிவங்களையும் நாம் உருவாக்கப் பழகியுள்ளோம். நாம் "கள்" என்பதை போதை தரும் பானமாக இருந்தாலும் ஆரோக்கிய வழிமுறையாகவும் பயன்படுத்தியுள்ளோம். உடல் தேறாத பிள்ளை அல்லது பெரியவராயினும் தினசரி ஒரே மரத்தின் கள்ளைத் தொடர்ந்து ஒரு மண்டலம் பருகிவர உடல் தேறிவிடும். ஒரு மண்டலம் என்பது நாற்பத்தெட்டு நாட்கள்.

மாசி முடிய பனைகளில் கள்ளிறக்கும் வேலை நடக்கும் இந்தத் தொழிலைச் செய்பவர்கள் மிகுந்த ஆற்றல் உடையவர்கள். மிக மிக உயரத்தில் தமது தொழிலை செய்யும் இந்த மக்கள் மிகமிக பள்ளத்தில் தமது வாழ்க்கையை வாழ்கிறார்கள். பெரும்பாலும் நல்ல வீடுகளையோ மற்றவர்களுக்கு நிகரான நிலங்களையோ பெற்றுக் கொள்ள முடியாதவர்களாகவே வாழ்ந்தார்கள். ஒருகாலத்தில் இவர்களுக்கு கல்வி மறுக்கப்பட்டிருந்தது. கல்வி கற்கும் வாய்ப்புகள் வந்தபோதும் இவர்கள் பாடசாலைகளில் பெற்ற அவமானங்கள்

> பனை மரத்திலிருந்து வடியும் கள்ளை மதுசாரமில்லாமல் கருப்பணியாகவும் இறக்கி அதில் பனங்கட்டிப் பனை கற்கண்டு என பல்வேறு வடிவங்களையும் நாம் உருவாக்க பழகியுள்ளோம்.



தொடர்ந்து அவர்களைப் படிக்க விடவில்லை. ஆயினும் சிலர் கல்விகற்றுத் தம்மை சமூகத்தில் நிலை நிறுத்தினார்கள். இது அவர்களைப்பற்றிய கதையல்ல. மதுவின் கதை.

மது மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில் அருந்தி மகிழும் ஒரு பானம். தேவர்களும் அமிர்தமென மதுவை பருகுவார்கள். ஆதிகாலத்தில் மதுவென நாம் கொண்டாடிய பானம் தேன்தான். பின்னர் வீடுகளில் பெண்களால் அரிசியிலிருந்து மதுவை தயாரிக்க முடிந்தது என்பார்கள். சில வகை செடிகளில் இயற்கையாகப் போதைதரக்கூடிய தன்மை இருந்தது. பத்திரிகை தர்மம் கருதி அவற்றின் பெயர்களை நான் இங்கே எழுத முடியாது. நீங்கள் நினைப்பது போல அது கஞ்சா அல்ல. சற்றே அதிகம் பாவித்தாலும் மூளையைத் தாக்கக் கூடியவை. எமது அயலில் அரிதாகப் பெறக்கூடிய தாவரங்களில் சில பழங்களில் போதை இருக்கிறது.

காட்டிலேயே அலையும் என் தந்தை சொல்வார் காலில் மிதிபட்டாலும் அறிவை மயக்கக் கூடிய மூலிகைகள் உண்டு என்று. மது சாதாரணமாக உடல் வலியைப் போக்க வல்லது. அளவாகப்பாவித்தால் மட்டும். உங்களுக்குத்தான் தெரியுமே அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று. காலப்போக்கில் மதவாதங்கள் பெருகிப் போனபோது மதுவை விலக்கி வைக்க வேண்டும் என்ற கருத்து நிலைத்தது. கிருஸ்ணன் அவதாரம் செய்த பெருங்குடியான ஆயர்குலம் மதுவால் அடியோடு அழிந்ததாக வரலாறு அன்றைக்கே எழுதி வைக்கப்பட்டது.

எனினும் கௌதம புத்தரும் சமணர்களும் மதுவை விலக்கும்படி மக்களுக்கு உபதேசித்ததார்கள். குறிப்பாகச் சமணர்கள் தேனைக்கூட விலக்கியே வைத்தார்கள். மதுவினால் ஏற்படும் தீமைகள் பற்றி ஏராளமான கதைகள் எம்மிடம் இருந்தாலும் மதுவை நிறுத்த முடிவதில்லை.

மதுவின் பின்னணியில் ஏராளமான சதிச் செயல்கள் உள்ளன. மதுபான விற்பனையாளர்கள் அதை திட்டமிட்டே கூலித் தொழிலாளர்களை இலக்குவைத்து தமது விற்பனை நிலையங்களை அமைக்கிறார்கள். அன்றாடம் உடல் நோக உழைப்பவனுக்கு அடுத்தநாளும் தன் உடலை வருத்த வேண்டிய தேவை இருப்பதால் அலுப்புத்தீரக் கொஞ்சம் குடிக்கலாம் என நினைக்கிறான். அந்த நினைப்பு ஒரு தடவை குடிக்க மட்டும்தான். அதற்குப்பின் அவன் குடித்த மதுவே அவனை வழிநடத்த ஆரம்பிக்கும்.

போதையில் என்ன செய்கிறோம் என்பது தெரியாமல் பணத்தை முடித்துவிட்டு வீட்டிற்குப் போனால் அவனது மனைவி பிள்ளைகளின் பசிக்கோலம் அவனுக்கு வெறுப்பை ஏற்படுத்த விளைவு என்னவாகும்? பசித்த பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாமல். தனது ஏழ்மைக்குக் காரணமும் அறியாமல், தனக்கு ஏற்படும் இயலாமை விரக்தியாக மாற, மனைவி பிள்ளைகளிடம் தனது கோபத்தை காட்டி வாழ்க்கையை நிம்மதியற்றதாக்கி அல்லலுறுகிறார்கள். எப்படிப் பார்த்தாலும் மது கேடு விளைவிக்கும் அதை தெரிந்து கொண்டாலும் ஒருவரால் தன்னை மீட்க முடியாமல் போகும். அவரது அறிவை ஏற்கெனவே குடித்த மதுசாரம் வேலை செய்ய அனுமதிக்காது.

பாரம்பரியமாக எமது மக்கள் கள்ளை தாமே உற்பத்தி செய்து பருகி வந்தார்கள். அந்த முறைகள் இப்போது இல்லை. இறக்குகிற கள்ளை கோப்ரேசனில் கொடுத்தாகவேண்டும். தனித்தனி தனது உற்பத்தியை விற்க முடியாது. அவர்கள் அதை பலதும் பத்துமாக வாங்கி ஒன்று சேர்த்து விற்கிறார்கள். அதாவது இடைத்தரகொன்று உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கூவில் கள்ளுக்கும் உரும்பிராய், வடிக்கும் பெயர்பெற்ற இடங்கள். “கள்ளை மரத்திலிருந்து இறக்கி வர நுரை பொங்கிவரப் பிளாவிலே வாங்கி மரத்தடியிலேயே குடிக்கிற சுகமிருக்கே” பெருமூச்சு விடும் பெரியவர்கள் நிறைய உளர். பனை அடர்த்தியாக இல்லாத நாட்டின் நடுப்பகுதிகளில் சாராயம் கோலோச்சுகிறது. இந்தச் சாராயமும் இன்றைய தொழிலாளிக்கு பெருவிழாக்களுக்கு மாத்திரம் என்று வரையறை செய்தாயிற்று. அதன் விலை அப்படி. சாதாரண கூலித் தொழிலாளி சாராயத்தை மறந்தே போனான். அதற்காக அவன் குடிப்பதில்லை என்று நான் சொல்லவில்லை. அன்றாடம் அவன் நிறை போதையில்தான் தூங்குகிறான். அவனுக்கென்றே கசிப்பு மிக அருகில் இலகுவாக கிடைக்கிறது.

கசிப்பு உற்பத்தியை நிறுத்த எந்த அரசாலும் அரசாங்கத்தாலும் முடிவதில்லை. அரசாங்கம் பாயில் நுழைந்தால் கசிப்பு உற்பத்தியாளர்கள் கோலத்திற்குள் நுழைவார்கள். அப்படியான ஒரு வலையமைப்பு இவர்களுக்கு. கசிப்பு உற்பத்தி செய்வதை நிறுத்தவும் அதனால் பெரும் தீமை விளைகிறது என மக்களுக்கு சுட்டிக்காட்டவும் அக்கறையுடன் செயற்படுவோர் யாரென நினைக்கிறீர்கள்? அது அரசாங்கம் அல்ல. சாராயக் குதங்களையும் கடைகளையும் குத்தகை எடுத்து வைத்திருப்போர் தான்.

பிரித்தானிய ஆட்சி நடந்த காலத்திலிருந்தே இதுதான் நடைமுறை. கசிப்பு விற்பனையைக் கண்டு கையும் களவுமாக பிடித்தாலும் அதற்குப் பாரிய தண்டனை கிடையாது. அபராதமும் சிறுதொகைதான். விசாரணையில் “அய்யோ தெய்வமே சாப்பாட்டுக்கே வழியில்லை பிள்ளைகளின் பசிபோக்க விற்றேன் எனக் கண்ணீர் வடிக்கும் குற்றவாளிக்குப் பத்தாயிரம் அபராதம் என தீர்ப்பு கிடைத்தால் அதை ஒரு மணி நேரத்திற்குள் கட்டிவிட்டு வெளியே செல்வதைக் காணலாம். காரணம் கசிப்பு உற்பத்தி ஒரு முதலாளியின் கையிலும் இறுதி நுகர்ச்சியாளருடனான தொடர்பு வீட்டிலுள்ள பெண்களிடமுமே உள்ளது. பாடசாலைப் பையுடன் கசிப்பையும் சுமந்து செல்லும் சிறுவர்களுக்கு அதை உரிய இடத்தில் சேர்த்தால் சில்லறை கிடைக்கிறது.

மது அதன்மீது பற்றுக் கொண்டவர்கள் மூலம் அதை அருந்துபவரை பொருளாதார ரீதியாகவும் ஆரோக்கியரீதியாகவும் குடிப்பவரின் மனநிலையை மாற்றுவதாலும் அவனது குடும்பத்துக்கும் அவன் சார்ந்த சமுதாயத்திற்கும் பெருந் தீமையை விளைவிக்கிறது. ஆனாலும் எமது வன்னிக் கிராமங்களில் இப்போது பெரியவர்கள் சாராயக் கடைகளுக்கு போகாமல் வீட்டிலேயே தமக்குத் தேவையான உற்பத்தியைச் செய்து கொள்ளும் அளவுக்கு வளர்ச் சியடைந்துள்ளார்கள். இன்னும் என் னென்ன நடக்கப் போகிறதோ?

# இலாபம் தரும் இஞ்சி பயிர்ச் செய்கை



லாபம் தரும் பயிர்களில் இஞ்சி பயிர் செய்கையும் ஒன்று.

பழங்காலத்தில் உலகளவில் பழக்கத்தில் இருந்த பாரம்பரிய மருத்துவ முறையில் 60% மருந்துகள் இஞ்சியையே மூலப் பொருளாக கொண்டிருந்ததாக மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

11-ம் நூற்றாண்டில் இஞ்சி வர்த்தகத்தில் அதிகளவாக அரேபியர்கள் தான் இஞ்சியை பயன்படுத்தினார்கள்.

தற்பொழுது உலக அளவில் இந்தியாவில் தான் அதிகளவில் இஞ்சி உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இதற்கு அடுத்தபடியாக சீனாவில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இஞ்சி உணவின் ருசி கருதி அனைத்து நாடுகளிலும் தங்கள் உணவுகளில் சேர்த்துக் கொள்ளப்படும் ஒரு முக்கிய நறுமண பொருளாகும்.

நல்ல வடிகால் வசதியுள்ள இதமான வெப்பநிலை உள்ள இடங்களில் சிறப்பாக வளரக்கூடியது. மணல், களிமண் கலந்த

> "இஞ்சிக்கிழங்கை பொறுத்தவரை சந்தை வாய்ப்பு மிக மிக அதிகம் ஆகையால் தயங்காமல் நடவு செய்யலாம். அதோடு விரைவில் பழுதாகாது சந்தைப்படுத்தலின் போது பல நாட்கள் வைத்திருக்க முடியும்."

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



குறுமண், சிவப்பு குறுமண் நிலங்களில் நன்கு வளரும்.

இறுக்கமான நிலங்களில் அதிலும் குறிப்பாக கற்கள் நிறைந்த நிலங்களில் வளராது.

அதோடு சேற்று நிலங்களிலும் வளராது. வறட்சியான நிலங்களிலும் வளராது.

இஞ்சி ஒரு பருவ கால பயிராகும். அத்துடன் இஞ்சி அறுவடைக்கான சிறந்த காலம் மார்ச் மாதம் நடுப்பகுதி முதல் மற்றும் ஏப்ரல் மாதம் ஆரம்ப பகுதி வரையிலாகும். பொதுவாக இஞ்சி சரியான உற்பத்தியை தருவதற்காக இருந்தால் 8 - 10 மாதங்கள் எடுக்கின்றன.

பொதுவாக மே - ஜூன் மாதங்கள் இஞ்சி பயிரிடுவதற்கு ஏற்ற மாதங்கள் ஆகும். இருப்பினும் உலர் வலயத்தில்

இஞ்சி செப்டம்பர் முதல் ஒக்டோபர் வரை பயிர் செய்யப்படுகின்றன.

இஞ்சி கிளங்குகளை சிறு சிறு துண்டு களாக வெட்டி நடுகை செய்யப்படுகிறது. கிழங்குகளை வெட்டும் போது ஒவ்வொரு மொழிப் பகுதிகளையும் பார்த்து வெட்டி எடுக்க வேண்டும்.

நன்கு முற்றிய தரமான கிழங்குகளை மட்டுமே விதைக்கிழங்குகளாக பயன் படுத்தப்பட வேண்டும்

ஒரு ஏக்கருக்கு 650 - 700 கிலோ இஞ்சி கிழங்குகள் தேவைப்படும்.

இஞ்சி நடுகை செய்ய பிப்ரவரி -மார்ச் மாதம் கோடைக்கால மழை கிடைத்தவு டன் நிலத்தை 3 முறை நன்றாக உழுது தயார் செய்ய வேண்டும்.

முதல் உழுவின் போது ஒரு ஏக்கருக்கு ஒரு டன் காய்ந்த மாட்டு எருவினை இட்டு உழவு செய்ய வேண்டும்.

எந்த அளவு நிலம் பண்படுத்தப்படு கின்றதோ அந்த அளவுக்கு விளைச்சல் இருக்கும் என்பதையும் நினைவில் வையுங்கள்.

இஞ்சியைப் பொறுத்தவரை பாத்தி முறை பயிர்ச்செய்கையே சிறந்ததாக இருக்கும்.

பாத்தி அமைக்கும் போது 15 செ.மீ உயரம், 1 மீறறர் அகலத்தில் மற்றும் தேவையான நீளம் வைத்து பாத்திகள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு பாத்திக ளுக்கிடையே 45 செ.மீ இடைவெளி இருக்க வேண்டும். ஒவ்வொரு பாத்தியிலும் மூன்று வரிசையில் நடவு செய்யலாம்.


கோடைமழை கிடைத்தவுடனே இஞ்சி நடவு செய்ய வேண்டும். 15 - 20 கிராம் எடை மற்றும் 2 - 4 செ.மீ நீளம் உள்ள கிழங்கு துண்டுகளை பாத்திகளில் 30 x 30 செ.மீ இடைவெளியில் சிறு குழிகளில் நடுதல் வேண்டும்.

நன்கு சிதைந்த அதாவது மக்கிய மாட்டு எரு அல்லது மண்புழு உரம் அல் லது மக்கிய உரம் ஒரு ஏக்கருக்கு 2 டன் என்ற அளவில் ஒவ்வொரு குளிகளிலும் கிழங்குகளை நடும் போது ஒரு கைப்பிடி அளவு இட்டு நட வேண்டும்.

விதைக்கிழங்குகளில் திடகாத்திரமான ஒரு அரும்பு (குருத்து) ஆவது மேல் நோக்கி இருக்குமாறு பார்த்து நடவேண டும்.

நட்டவுடன் உயிர் நீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் மண்ணின் ஈர தன்மைக்கேற்ப நீர் பாய்ச்ச வேண்டும். மேலுரம் இடும்போது மண் அணைத்து நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தூவல் நீர்ப்பாசன கட்டமைப்பாக இருந்தால் தேவைக்கு ஏற்றால் போல்



நீரினை பயன்படுத்தி கொள்ளலாம் அதோடு அதிக விளைச்சலும் எமக்கு கிடைக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

இஞ்சி முளைத்து 30 நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவை பயிர் வளர்ப்பு ஊக்கியான ஜீவாமிர்தம், பஞ்சகாவியா, மீன் அமிலம் போன்றவற்றை மாற்றி மாற்றி பயிருக்கு பயன்படுத்தி வந் தால் பயிரின் வளர்ச்சி நன்றாக இருக்கும் அதோடு இலைகள் அடர் பச்சை நிறமாக வும் இருக்கும்

நட்டு 2 மாதத்தில் களை அதிகமாக இருந்தால் களை எடுக்க வேண்டும்.

மற்றும் 4வது, 5வது மாதங்களில் மீண்டும் களை எடுக்க வேண்டும். பாத்தி களில் களை எடுக்கும் போது கைகளால் பிடுங்குவது சிறந்ததாக இருக்கும்.

நிலத்தின் ஈர பதத்தினை அறிந்து நீர் பாச்சி வர வேண்டும்.

அதோடு நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இஞ்சி உணவு பயன்பாட்டிற்காக பயன் படுத்துவதாக இருந்தால் ஆறு மாதத்தில் அறுவடை செய்ய வேண்டும்.

விதைப் பயன் பாட்டிற்கும். சுக்கு (உலர்ந்த இஞ்சி) தயாரிக்க பொதுவாக 8 மாதத்தில் (இலைகள் மஞ்சள் நிறமாக மாறும்போது) அறுவடை செய்ய வேண்டும்.

அதோடு இளம் பயிராக இருக்கும்போது இலைகள் மஞ்சள் நிறமாக மாறி நுனி கருக ஆரம்பித்தால் அது நோய் தாக்கமாக கருதப்படும்.

நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ள பயிர்களில் இஞ்சியும் ஒன்று ஆகையால் இஞ்சியைப் பொருத்தவரை இலை கருகல் போன்ற நோய்கள் மட்டுமே தாக்கும் வாய்ப்பு உள்ளது.

இதனை இயற்கை முறையில் அக் கினி அஸ்திரா, கற்பூர கரைசல், மூலிகை கரைசல் போன்ற இயற்கை கிருமி நாசினி களை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம்.

இரசாயன முறையில் கட்டுப்படுத்துவ தாக இருந்தால் உடன்கொல்லி கிருமி நாசினிகளை பயன்படுத்தாமல் ஊடுகொல்லி கிருமி நாசினிகளை பயன்படுத்த வேண்டும்.

விதைப் பயன்பாட்டிற்காக அறுவடை செய்தவுடனேயே, நோயுற்ற விதைக் கிழங் குகளை தேர்ந்தெடுக்க வேண்டும். அதன் பின் விதைக்கிழங்குகளை இதமான வெப்பநிலை உள்ள களஞ்சிய அறையினுள் அல்லது குழிகளில் வைத்து வெயில், மழை படாதவாறு பாதுகாக்க வேண்டும்.

கிழங்குகளில் அதிகளவான ஈரம் படும் பட்சத்தில் பழுதாக வாய்ப்பு உள்ளது. வெயில் படும் பட்சத்தில் பழுதாகாது மாறாக கிழங்குகளில் நிறை குறைந்து விடும்.

அதிக லாபம் தரும் பயிர்களில் இஞ்சியும் ஒன்று என்பதில் எந்தவொரு ஐயப்பாடும் இல்லை.

ஒரு ஏக்கருக்கு 8 -10 டன்கள் இஞ்சி கிழங்குகள் கிடைக்கும்.

இலங்கை ரூபாயில் 40 லட்சம் வரை லாபம் கிடைக்கும். விலையானது காலத் திற்கு காலம் மாறுபடும் என்பதையும் நினைவில் வையுங்கள். சாமர்த்தியமாக பயிர் செய்தால் எப்போதும் வெற்றி நமதே.

இஞ்சிக் கிழங்கை பொறுத்தவரை சந்தை வாய்ப்பு மிக மிக அதிகம் ஆகையால் தயங்காமல் நடவு செய்யலாம். அதோடு விரைவில் பழுதாகாது சந்தைப்படுத்தலின் போது பல நாட்கள் வைத்திருக்க முடியும்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மை தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி - 0770239784
WhatsApp - 0769196445

# கூடுதல் வருமானம் பெறுவதற்கு இரண்டாவது வேலை தேவையா?

> “வர்த்தகத் துறையில் வெற்றி பெற்றவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள், அதிக அறிவு கொண்டவர்கள் என்று நினைக்கிறோம். அது உண்மை அல்ல! அப்படியானால் அவர்களிடம் அப்படி என்னதான் இருந்தது?”

- எலிசபெத் -



ஓர் இடத்தில் நிரந்தரமாக வேலை பார்த்துக்கொண்டே கூடுதல் வருமானத்துக்காக மற்றொரு இடத்தில் பகுதி நேரமாக செய்கிறவர்கள் ஏராளம். பெண்கள், அவர்கள் பார்க்கிற முழுநேர வேலையைத் தாண்டிக் கூடுதல் வருமானத்துக்காகச் செய்யும் பகுதி நேரத் தொழில் குறித்து ‘சைட் ஹசில் இன் புராகிரஸ்’ (Side Hustle in Progress) என்னும் புத்தகம் விளக்குகிறது. பிரித்தானியாவில் வசிக்கும் எலிசபெத் ஒகாபி (Elizabeth Ogabi) எனும் பெண்மணி இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார்.

சைட் பிஸ்னஸ் என்று புத்தக ஆசிரியர் குறிப்பிடுவது ஒருவருடைய முழுநேரப் பணியைத்தாண்டி செய்யும் ஒரு தொழிலை. செய்திப் பத்திரிகை போடுதல், வார இறுதியில் ஒரு கடையில் வேலை செய்தல் அல்லது வீட்டில் இருந்தவாறே செய்யக் கூடிய வேலைகள் ரைப்பிங் செய்தல், ரியுசன் கொடுத்தல் போன்றதான இவை என்பதை புத்தக ஆரம்பத்திலேயே தெளிவாகக் கூறியுள்ளார். பார்க்கும் முழுநேர வேலையைத் தாண்டி மற்றொரு பகுதி நேரத் தொழிலை செய்ய நினைக்கும் பெண்களுக்கான புத்தகம் இது.

இலங்கையின் இன்றைய பொருளாதார நிலையில் கணவன், மனைவி இருவருமே வேலை செய்வது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. அதற்கும் மேலாக, முழு நேர வேலைக்கு மேலதிகமாகப் பெரும்பாலானவர்கள் மற்றொரு வேலையையும் தேடிக்கொள்கின்றார்கள். அதிக வருமானத்தைப் பெறுவதற்கு அது தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது.

“பெண்களின் தொழில்முனைவு குறித்த ஆய்வில் பிரித்தானியாவில் 6% பெண்களும், கனடாவில் 15% பெண்களும், அமெரிக்காவில் 11% பெண்களும், ஆஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்தில் 6% பெண்களும் சொந்தமாகத் தொழில் செய்கிறவர்களாக இருக்கின்றனர். 2017ஆம் ஆண்டு நிலவரப்படி, பிரித்தானியாவில் பகுதி நேர வேலை செய்பவர்கள் (ஒட்டு மொத்த அளவில்) 72 பில்லியன் ஸ்ரேர்லிங் பவுண்ஸ்கள் வருமானம் ஈட்டியுள்ளனர். பெண்கள் தொழில்முனைவு விகிதாசாரம் வளர்ச்சி அடைய வேண்டும் எனில், அவர்களுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் ஆதரவுகளும் அதிகரிக்கப்பட வேண்டும்” என்கிறார் ஆசிரியை.

### தொழில்முனைவு என்பது

“தொழில்முனைவோர் / நிறுவுனர் என்று ஒருவர் இன்று தன்னை அழைத்துக்கொள்வது ஒரு பாஷனாக இருக்கிறது. தொழில்முனைவு என்பது மிகவும் கவர்ச்சிகரமான ஒன்றாக இருந்தாலும் அது அவ்வளவு சுலபமான காரியமில்லை. குறிப்பாக, வேகமாகப் பணம் சம்பாதிப்பதற்கான வழியில்லை அது. நீங்கள் ஆர்வத்துடன் இருக்கிற ஒரு விஷயத்தை முயன்று பார்த்து இலாபகரமாக ஆக்கிக் கொள்ளும் முயற்சியே அது. இந்த முயற்சியில் ஒரு சீரான கூடுதல் வருமானம் உங்களுக்கு வரலாம். அப்படிப்பட்ட அந்த வருமானம் உங்களுக்கு மகிழ்ச்சியையும் மனத் தைரியத்தையும் தரும். ஆனால், அதற்காக நீங்கள் காத்திருக்க வேவண்டியிருக்கும்.

பகுதி நேர வேலை ஒன்றை வைத்துக் கொண்டு பில்லியனர் ஆக முடியாது. இணையம் பெரியளவில் பிரசித்திபெற்றுள்ள காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருவதால், நம்முடைய பகுதி நேர வேலையை வேகமாக வாடிக் கையாளரிடம் கொண்டுபோய் விட முடியும் என்பது அனுகூலமான ஒன்றாக இருந்தாலும், அது உடனடியாக வெற்றியைக் கொண்டு வந்து சேர்த்துவிடாது. சரியான ஐடியா, சரியான முயற்சி மற்றும் சரியான உழைப்பு என்ற மூன்றும் சேர்ந்தால் மட்டுமே உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

### வெறும் ஐடியா ஜெயிக்குமா?

பயணம் செய்யும்போதோ, குளிக்கும்போதோ நமக்கு திடீரென்று ஒரு தொழில் குறித்த ஐடியா பளிச்சென மூளையில் உதிக்கும். அதைச் செயல்படுத்தினால் பிரமாண்டமான வெற்றி கிடைக்கும் என்று மனதில் தோன்றும். அது குறித்து தொடர்ந்து சிந்திப்பீர்கள். உறங்கும்போதும் இது குறித்த எண்ணமே மனதில் ஓடிக் கொண்டிருக்கும். உங்கள் நண்பர்களிடம் உங்களின் வர்த்தக ஐடியா குறித்து விவாதிப்பீர்கள்.

ஆனால், இந்த ஐடியாக்கள் பெரும்பாலும் நம்முடைய மனதில் ஐடியாக்களாகவே இருந்து மறைந்துவிடும். இதற்குக் காரணம், இந்த ஐடியாவின் மீது உங்களுக்கு இருக்கும் நம்பிக்கையின் அளவில் குறைபாடு என்பதில்லை. அந்த ஐடியாவை செயல்படுத்துவதில் இருக்கக்கூடிய இடைஞ்சல்களே ஆகும்.

உதாரணமாக புதிய முயற்சிக்கான ஐடியாவெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது.

இதைச் செயல்படுத்த என்னால் முடியுமா? என்ற எண்ணம் உங்கள் மனதில் இருக்கும். எங்கே ஆரம்பிப்பது? என்பது பிடிபடாது. இதைச் செயல்படுத்த நமக்கு எங்கே நேரம் இருக்கிறது? அலுவலகப் பணி நம்முடைய நேரத்தை முழுமையாக எடுத்துக்கொள்கிறதே என்கிற எண்ணம் இருக்கும்.

'ஐடியா ரொம்ப நன்றாக இருக்கிறது. ஆனால், இது வெற்றிபெறுமா'? என்கிற தயக்கமும் பயமும் சேர்ந்து அந்த ஐடியாவை செயல்படுத்த விடாமல் தடுத்துவிடும். இந்தப் பயத்தை விட்டொழித்து நமக்கு தோன்றும் புதிய தொழில் முயற்சி குறித்த ஐடியாவை செயல்படுத்த முதலில் நாம் செய்ய வேண்டியது என்ன?




அந்தத் தொழில் முயற்சி குறித்த ஐடியாவுக்குத் தேவையான விஷயத்தை சின்னச் சின்னதாக / ஒவ்வொன்றாகச் செயல்படுத்துவதுதான். வெறுமனே ஐடியாவை மனதில் சுமக்காமல் அதைச் செயலாக்கும் முயற்சிகளை அன்றாடம் மிகச் சிறிய அளவில் செய்ய ஆரம்பித்தாலுமே நாளடைவில் அந்த முயற்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து உங்களுடைய பகுதி நேரத் தொழில் முயற்சியை வெற்றிகரமானதாக உருவாக்கி நிலைநிறுத்திவிடும்" என்கிறார் ஆசிரியர். அதிக வருமானம் வருமானால், அதனையே நீங்கள் முழு நேரத் தொழிலாகவும் - அல்லது பிரதான தொழிலாகவும் மாற்றிவிடலாம்.

### சின்னதாக ஆரம்பியுங்கள்

இந்த உலகத்தில் பெரும்பாலான விஷயங்கள் மிகச் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டவையே என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் தற்போதிருக்கும் இடத்தில் இருக்கும் நிலையில் இருந்துகொண்டே உங்களுடைய பகுதி நேரத் தொழிலை ஆரம்பிப்பது எப்படி? என்பதைப் பல்வேறு நிஜ வாழ்க்கை உதாரணங்களுடன் விளக்கியிருக்கிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர்.

"பெண்கள் செய்யும் தொழில்முனைவில் அவர்களுடைய உடல் ஆரோக்கியம் மற்றும் மன ஆரோக்கியம் என்ற இரண்டின் பங்களிப்பு மிகவும் பெரியதாக இருக்கிறது என்பதால், பயணத்தை ஆரம்பிக்கும்முன்பே இந்த இரண்டையும் சீர்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஆரம்பத்திலேயே ஆசிரியை வலியுறுத்துகிறார். உங்கள் ஐடியா எவ்வளவு சூப்பராக இருந்தாலுமே உடல் மற்றும் மன ஆரோக்கியம் சரியாக இல்லை எனில், உங்களால் அந்த ஐடியாவை வெற்றிபெற வைக்க முடியாது.

### அறிவாளிகள் மட்டுமா வெற்றிபெற முடியும்?

பொதுவாக, வர்த்தக முயற்சிகளின் வெற்றி குறித்து நாம் என்ன நினைக்கிறோம்? வெற்றி பெற்றவர்கள் எல்லாம் மிகவும் திறமை வாய்ந்தவர்கள், அதிக அறிவு (IQ) கொண்டவர்கள் என்றுதானே நினைக்கிறோம். ஆனால், நடப்பில் இது உண்மையில்லை. தொழிலில் வென்றவர்கள், தலைவர்கள், புதிய விஷயங்கள் கண்டுபிடிப்பாளர்கள் போன்றவர்களிடம் எது அவர்களை வெற்றிபெற வைத்தது என்று தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் பின்வரும் கேள்விகளை என்னுடைய நிகழ்ச்சிகளில் நான் கேட்பேன்.

இந்தக் கேள்விக்கு அவர் சொல்லும் பதில் இரண்டு தான். ஒன்று, திறமை, மற்றொன்று, தைரியம் நூற்றுக் கணக்கான தொழில்முனைவோர்களை நேர்காணல் செய்தபின் நான் கண்டறிந்தது என்ன தெரியுமா? இவர்கள் அனைவருமே ஒரு சில தடவை தோற்றாலுமே மனம் தளராமல் தொடர்ந்து முயற்சிகளைச் செய்தனர் என்பதைத்தான்.



எனவே, ஒரு தொழிலில் வெற்றி பெற அந்தத் தொழில் குறித்த அனைத்து விஷயங்களையும் நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டியதில்லை. அதிபுத்திசாலியாகவும் இருக்க வேண்டியதில்லை. ஐடியா சரியாக இருக்கிறபட்சத்தில் எது வந்தபோதும் அந்தத் தொழிலை விட்டு விலகாமல் கற்றுக் கொண்டு, ஒருவேளை தோற்றால் மீண்டும் முயற்சி செய்து பார்க்கும் மனநிலையைக் கொண்டிருத்தலே வெற்றிக்கு வழிவகை செய்யும் முக்கிய காரணியாக இருக்கிறது.

ஒரு ஐடியாவைத் தொழிலாக மாற்றும் முயற்சியில் வெற்றி பெறுவது வெறும் பணம் சம்பாதிக்க மட்டுமல்ல, இந்த நடைமுறையில் நீங்கள் எந்த மாதிரியான அனுபவங்களைப் பெறுகிறீர்கள் மற்றும் எந்த மாதிரியான நபராக உருவெடுக்கிறீர்கள் என்பது தான் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. இதுதான் இந்த விஷயத்தில் நடக்கிற மிகச் சிறந்த சுய முன்னேற்றம். தோல்வியின் ஆரம்பம் சுய நம்பிக்கை இல்லாமல் செயல்படுவதிலும் வெற்றிக்கான ஆரம்பம் அபரிமிதமான சுயநம்பிக்கையிலுமே இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உங்களை நீங்கள் நம்பி, அந்த நம்பிக்கையை உணர்ந்து செயலாற்றத் தொடங்கும்போதே வெற்றி என்பது நம்பிக்கைக்குக் கிடைக்கிறது" என்று சொல்லும் ஆசிரியர், எப்படிச் சுய நம்பிக்கையை வளர்த்துக்கொள்வது என்பதையும் விளக்கமாகக் கூறியுள்ளார்.


### கவனிக்க வேண்டியவை

எப்படி நம்முடைய திறமை, கையில் இருக்கும் உபரியான நேரம் மற்றும் நம்முடைய ஈடுபாட்டுக்கு ஏற்ற பகுதி நேரத் தொழிலைத் தேர்வு செய்வது, தேவைப்படும் பணம் எவ்வளவு என்பதை எப்படிக் கணக்கீடு செய்வது, பார்க்கிற முழுநேர வேலைக்கும் பகுதி நேர வேலைக்கும் இடையே முரண்பாடுகள் இல்லாமல் பார்த்துக்கொள்வது, எப்படி இரண்டு பணிகளுக்கும் அர்ப்பணிப்புடன் நடந்துகொள்வது, ஆலோசனை வழங்கக்கூடியவர்களைக் கொண்டிருக்க வேண்டியதன் அவசியம், இருக்கிற நேரத்தை எப்படிச் சிறப்பாக உபயோகப் படுத்திக்கொள்வது, எப்படி ஐடியாவை தொழிலாக மாற்றிப் பணத்தை சம்பாதிப்பது, முதல் வாடிக்கையாளரை எப்படிப் பெறுவது, எப்படி விரிவாக்கத்துக்கான நிதியைப் பெறுவது என்பது போன்ற பல்வேறு பகுதி நேரத் தொழில் சார்ந்த விஷயங்களை விளக்கமாகச் சொல்கிறது இந்தப் புத்தகம்.

ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரித்து எழுதப்பட்ட இந்தப் புத்தகத்தின் ஒவ்வோர் அத்தியாயத்தின் இறுதியிலும் வெற்றி பெற்ற ஒருவரின் நிஜ வாழ்க்கையில் வெற்றி பெற அவர் கடைப்பிடித்த விஷயங்களை விரிவாக விளக்கியுள்ளார் ஆசிரியர். பகுதி நேர வேலையில் பெண்கள் வெற்றி பெறத் தேவைப்படும் அத்தனை விஷயங்களையும் தெளிவாகத் தந்திருக்கும் இந்தப் புத்தகத்தை பகுதி நேர வேலை செய்ய நினைக்கும் அனைவரும் ஒருமுறை படித்துப் பயன்பெறலாம்.

# நுண்ணுயிர்க் கொல்லிகளின் எதிர்ப்பு நிலை கால்நடை மருத்துவத்தின் நிலைப்பாடு

Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்



**பகுதி 2**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### நுண்ணுயிர்கள் என்பவை யாவை?

நுண்ணுயிர்கள் எனப்படுபவை கண்ணுக்குத் தெரியாத மிக சிறிய ஒற்றைக் கல உயிரினங்களாகும். இவை நிலம், நீர், தாவரம் விலங்கு என உலகில் சகல இடங்களிலும் பரவிக் காணப்படுகின்றதோடு உலகில் அதிகமாகப் பரவி வாழும் உயிரினங்களாகவும் அமைகின்றன. இவை உலகில் முதலில் தோன்றிய உயிரினமாகவும் நம்பப்படுகின்றன.

இவை இறந்த தாவர விலங்குகளை, கடினமான கழிவுகளைச் சிறு சிறு துண்டுகளாக் உடைத்து உக்க செய்கின்றன. வளிமண்டல நைதரசனைப் பிரித்து மண்ணை வளப்படுத்துகின்றன. தமது செயற்பாடுகள் மூலம் பல உணவு பொருட் களை உருவாக்கவும் செய்கின்றன.

நு ண்ணுயிர்களில் பெரும்பாலானவை நன்மை பயப்பவை. சில நன்மையோ தீமையோ செய்யாதவை. சில சந்தர்ப்பம் வரும் போது தீமை செய்பவை. மிக சிறிய தொகையின எப்போதும் தீமையே செய்பவை. தீமை விளைவிக்கும் நுண்ணுயிரிகள் உடலின் நோய் எதிர் சக்தி நலிவடையும் போது உடலின் பாதுகாப்பு அரண்களை உடைத்து அவை மனிதன் மற்றும் விலங்குகளில் நோயை ஏற்படுத்துகின்றன. சில உயிரிகளின் நோய் எதிர்ப்பு சக்தியை [immune system] தாக்கி நோயை ஏற்படுத்துகின்றன.

### நுண்ணுயிர் கொல்லி என்றால் என்ன?

நுண் ணுயிர்களை தமது உயிர் இரசாயனச் செயல்கள் மூலம் அழிவடைய செய்யும் அல்லது அவற்றின் வளர்ச்சியை பாதிப்படைய செய்யும் பதார்த்தங்கள் நுண்ணுயிர் கொல்லிகள் எனப்படும். இவை பக்டீரியோ சைடல் [Bacterio cidal] பக்டீறியோ ஸ்டாடிக் [bacterio static] என இரண்டு வகைப்படும். பக்டீரியா சைடல் நுண்ணுயிர்களை முற்று முழுதாக அழிக்கும் அதேவேளை பக்டீரியோ ஸ்டாடிக் நுண்ணுயிர்களின் வளர்ச்சியை பாதிப்படையச் செய்கின்றன..

### நுண்ணுயிர் கொல்லிகளின் சுவையான வரலாறு

அலெக்ஸ்சாண்டர் பிளமிங் என்னும் உயிரியலாளர் 1928 ஆம் ஆண்டில் staphylococci மற்றும் streptococci நுண்ணுயிர்கள் தொடர்பான ஆராய்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் நடுவே அவசர விடுமுறையில் செல்ல வேண்டி ஏற்பட்டதால் பரிசோதனை தட்டினை மூடாமல் சென்று விட்டார். விடுமுறை முடிந்து வந்த போது penciliam notatum என்னும் மதுவத்தால் மாசுபட்ட நிலையில் அந்தத் தட்டுக் காணப்பட்டது. அதிசயமாக அந்த மதுவ வகை உயிரினம் காணப்பட்ட பகுதியில் மேற்படி நுண்ணுயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தான் பென்சிலின் நுண்ணுயிர் கொல்லியின் கண்டுபிடிப்பின் அடிப்படையாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தில் காயம்பட்ட பல இராணுவ வீரர்களின் கடவுளாக இந்த பென்சிலின் நுண்ணுயிர் விளங்கியது. பென்சிலின் மட்டும் இல்லாது இருந்திருந்தால் அவர்கள் மரணித்து இருப்பார்கள். பென்சிலினின் அதிசயத்தால் மருத்துவத்துக்கான நோபல் பரிசினையும் அலெக்ஸ்சாண்டர் பிளமிங் பெற்றுக் கொண்டார்.

### ஒவ்வொரு நுண்ணுயிர் கொல்லிகளும் உருவாகிய காலப்பகுதி

கடந்த பதினைந்து வருட காலத்தில் புதிதாக எந்த வித நுண்ணுயிர் கொல்லிகளும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு Antibiotic resistant ] என்றால் என்ன ?


நுண்ணுயிர்கள், நுண்ணுயிர்க் கொல்லிகளில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள எதிர்ப்புச் சக்தியை உருவாக்குதல் ஆகும். தமது மூலக்கூற்று அதாவது மரபணு மட்டத்தில் எதிர்ப்பை உருவாக்கி விடுவதோடு மிக விரைவாகவும் அடுத்த சந்ததிக்குக் கடத்தியும் விடுகின்றன.

இந்த நிலையை நவீன மருத்துவத்தின் சாவு மணி [End of modern medicine] என அழைக்கின்றனர். மிகச் சிறிய முள்ளுகுத்தினால் கூட நீங்கள் மரணிக்கக் கூடும் என கூறப்படுகிறது. சத்திர சிகிச்சைகள் புற்று நோய் சிகிச்சைகள் போன்ற நவீன மருத்துவச் சிகிச்சைகள் நடைபெறாது பல உயிரிழப்புகள் மனித மற்றும் விலங்குகளில் இடம்பெற கூடும். இன்றை திகதியில் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்புப் காரணமாக பல உயிரிழப்புகள் மற்றும் அதிக மருத்துவ செலவுகளும் ஏற்படுகின்றன.

### நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு நிலைக்குக் காரணங்கள் எவை?

சுய மருத்துவம்

ஒழுங்கற்ற கண்காணிப்பு முறை மற்றும் ஒழுங்கமைக்கப்படாத கண்காணிக்கும் அமைப்புகள்.



நுண்ணுயிர் கொல்லிகள் மற்றும் அவற்றின் எதிர்ப்புத் தொடர்பான போதிய விழிப்புணர்வு இன்மை.

சர்வதேசப் பயணம் மற்றும் வர்த்தகத்தின் அதிகரிப்பு.

மருத்துவர் பரிந்துரைத்த அளவு மற்றும் சரியான கால அளவில் மருந்துகளை உட்கொள்ளாமை.


கால்நடைத் துறை,மீன் வளத்துறை மற்றும் வேளாண்மையில் பயன்படும் நுண்ணுயிர் கொல்லி மருந்துகளின் முறையற்ற பாவனை.

புதிய நுண்ணுயிர்க் கொல்லிகள் கண்டுபிடிக்கபடாமை மற்றும் மிக விரைவாக நுண்ணுயிர்கள் நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு எதிர்ப்பைப் பெறுதல். ஜவிரைவான மிக் மரபணு மாற்றம் செய்வது மூலம்.

பொது சுகாதாரமின்மை

கால்நடைகளில் நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பு நிலை

கால்நடை மருத்துவத்தில் நுண்ணுயிர்க் கொல்லிகளின் பாவனை அதிகளவில் காணப்படுவதால் அங்கு நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு உயிரிகளின் அளவும் அதிகமாக உள்ளது. உலக அளவில் மூன்றில் இரண்டு பங்கு நுண்ணுயிர்க் கொல்லிகள் கால்நடை வளர்ப்பில்தான் பாவிக்கப்படுகின்றன. விலங்குகளில் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவும் நோய்களைக் கட்டுப்படுத்தவும் நுண்ணுயிர் கொல்லிகள் பயன்படுத்தப்படும் அதே வேளை வளர்ச்சி ஊக்கிகளாகவும் பாவிக்கப்படுகின்றன.



பெரும்பாலும் மிகக் குறைந்த வலுவில் தொடரச்சியாக மேற்படி நுண்ணுயிர் கொல்லிகள் பயன்படுவதால் பல நோய் விளைவிக்கும் நுண்ணுயிர்கள் இலகுவாக எதிர்ப்புச் சக்தியைப் பெறுவதோடு தமது சந்ததிகளை எதிர்ப்பு மிக்கவையாக உருவாக்கி விடுகின்றன. மனிதர்களை பாதிக்கும் சிலவகை சல்மோனெல்லா [salmonella], கம்பெய்லோபக்டர் [comphylobactor], என்றிறோகொக்கஸ் மற்றும் ஈ- கோலை[E.coli] நுண்ணுயிர்களின் மூலமாகக் கால்நடைகளே காணபடுகின்றன. பல நாடுகளில் மேற்படி நுண்ணுயிர்களுக்கு பாவிக்கப்படும் நுண்ணுயிர் கொல்லிகளுக்கு எதிருயிர்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஆய்வுகளின் அடிப்படையில் விலங்குகளில் பாவிக்கப்பட்ட முறையற்ற நுண்ணுயிர்க் கொல்லிகளின் பாவனைதான் காரணமாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

(மிகுதி அடுத்த வாரம் தொடரும்...)

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

# குறும்படப் போட்டி 2023

தமிழ் மக்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு வெளிவரும் "தமிழர் பொருண்மியம்" வார இதழ், ஒகஸ்ட் மாதத்தில் நடத்தவுள்ள "கோடைக் கொண்டாட்டம்" நிகழ்வை முன்னிட்டு நடத்தும் குறும்படப்போட்டி.



» குறும்படங்கள் ஒவ்வொன்றும் 3 நிமிடத்திற்கு குறையாமலும் 8 நிமிடத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
» குறும்படங்கள் எமது பொருளாதாரத்தைப் பேசுவதாக அமைதல் வேண்டும்.
» வேறு எந்த இடங்களிலும் வெளியிடப்படாததாகவும், யாரையும் புண்படுத்தாததாகவும் இருக்க வேண்டும்.
» நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
» உங்களைப் பற்றிய விபரங்களுடன் விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி : 20.07.2023
» உங்கள் குறும்படங்களை HD தரத்தில் Google Drive வில் பதிவேற்றம் செய்து கீழ்காணும் மின்னஞ்சலுக்கு முழுமையான விபரங்களோடு அனுப்பிவைக்க வேண்டும்: Tamilseconomy@gmail.com

**முதல் பரிசு - ரூபா 25,000**
**2ஆம் பரிசு - ரூபா 15,000**
**3ஆம் பரிசு - ரூபா 10,000**

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் : 0777276949



# பருவத்தே

‘மரத்தால் விழுந்த பனங்காய்களை எடுத்து புழுப்பிடித்துள்ளதா? எனப் பரிசோதிக்க வேண்டும். அன்றைய தினம் மரத்தால் விழுந்த பனங்காய் புழு இல்லாமல் நல்ல நிலையில் இருக்கும். அப்படியான பனங்காய்களை எடுத்து அவற்றைப் பிரித்து அதனைப் பாத்திரமொன்றில் இட்டுப் பிசைந்து பனங்களியைத் தனியாக எடுக்க வேண்டும்’

வேதநாயகம் தபேந்திரன்



சித்திரை பிறந்தவுடன் பலாப்பழச் சீசன் ஆரம்பமாகும். ஆடி ஆவணி பிறந்து விட்டால் பனங்காய்க் காலம் தொடங்கும்.

பலாப்பழ சீசன் காலத்தில் பலாக்கொட்டை பரவலாகப் புழங்கும். அது போலப் பனங்காய் அதாவது பனம்பழக் காலத்தில் அவை தேடுவாரற்று நிலத்தில் கிடப்பதனைப் பரவலாகக் காணலாம்.

ஆனால் இவை இரண்டும் சுவையான உணவுப் பொருள்களைத் தயாரித்து விற்று வருவாய் ஈட்டக் கூடிய அருமையான உணவு மூலப் பொருளாகும். இரசாயனம் எள்ளளவும் கலக்காத இயற்கையின் அருமையான கொடையாகும்.

பலாக்கொட்டையை எடுத்துப் பொரித்துப் பலாக்கொட்டைப் பொரியலை விற்கலாம். தூய்மையான தேங்காய் எண்ணெய்யில் பொரித்த பலாக் கொட்டைகள் நல்லதொரு சுவையான உணவாகும்.

பலாக்கொட்டையை பாக்கு வெட்டியால் நான்காகப் பிளந்து அதன் தோலை நீக்கித் தண்ணீரில் கழுவித் தூய்மையாக்குதல் வேண்டும்.

பின்னர் அதன் மேல் அளவான உப்பு, அளவான மிளகாய்த்தூள் ஆகியவற்றை இட்டுப் பிரட்டுதல் வேண்டும்.

தாச்சியில் தேங்காய் எண்ணெய்யை விட்டு அதனை அடுப்பில் வைத்து நன்றாகக் கொதிக்க வைத்த பின்பாகப் பலாக்கொட்டைகளை அளவளவாக இட்டுப் பொரிக்க வேண்டும். பொரித்த பின்பாக அவற்றைப் பக்குவமாக எடுக்க வேண்டும்.

அற்புதமான சுவை மிகுந்த ஓர் உணவு கிடைக்கும். நாம் இதனை எமது குடும்ப மட்டத்தில் வைத்துள்ளோம். சுற்றுலாப் பயணிகள் மட்டத்தில் அறிமுகம் செய்து பணவருவாயினை ஈட்டிக் கொள்ளலாம்.

பனங்காய் என்கின்ற பனம்பழத்தினை எடுத்துப் பனங்காய்ப் பணியாரம் சுட்டு அதனை விற்பனை செய்து வருமானம் ஈட்டலாம்.

வறுமை உயர்வாக இருந்த ஒரு காலத்தில் அடுத்தவர் காணியில் கள்ளப் பனங்காய் பொறுக்கியவர்கள் இருந்தார்கள். ஆனால் இன்று பணவசதிகள் பெருகிப் பனங்காய்கள் தேடுவாரற்ற பொருள்களாகி விட்டன.

மரத்தால் விழுந்த பனங்காய்களை எடுத்து புழுப்பிடித்துள்ளதா? எனப் பரிசோதிக்க வேண்டும். அன்றைய தினம் மரத்தால் விழுந்த பனங்காய் புழு இல்லாமல் நல்ல நிலையில் இருக்கும். அப்படியான பனங்காய்களை எடுத்து அவற்றைப் பிரித்து அதனைப் பாத்திரமொன்றில் இட்டுப் பிசைந்து பனங்களியைத் தனியாக எடுக்க வேண்டும். பிசையும் போது அளவாகத் தண்ணீர் விடல் வேண்டும்.

அந்தக் களியை அரிதட்டு ஒன்றில்



விட்டுத் தும்பு நீக்கி எடுத்தல் வேண்டும். பின்னர் பனங்களியைத் தாச்சி ஒன்றில் விட்டு அடுப்பில் காய்ச்ச வேண்டும். காய்ச்சும்போது சூடான நிலையில் அளவாகச் சீனி போட்டுக் காய்ச்ச வேண்டும்.

காய்ச்சி வந்த பனங்களியை ஆறவிட வேண்டும். ஆறிவந்த பின்பு அரிதட்டில் அரித்து எடுத்த பச்சைக் கோதுமை மாவை அளவாக இட்டு அகப்பையால் கலக்குதல் வேண்டும். அதாவது மாவும் பனங்களியும் சேரும் வண்ணம் கலக்க வேண்டும். கையாலும் பிசைந்து கலக்க முடியும்.

தாச்சி ஒன்றில் அளவாகத் தேங்காய் எண்ணெய்யை இட்டு அதனை அடுப்பில் கொதிக்க வைக்க வேண்டும். நன்கு கொதிக்கும் நிலையில் பனங்காய் களியைக் கைகளால் அளவான உருண்டையாக்கி இடுதல் வேண்டும். நன்றாகக் கொதித்த தேங்காய் எண்ணெய்யில் சுடும் பனங்காய்ப் பணியாரங்கள் எண்ணெய் ஊறாமல் தரமான சுவையைத் தரும். அதனால் எண்ணெய்ச் சிக்கனம் இருப்பது மட்டுமல்ல சுவையும் உயர்தரமாக இருக்கும்.

பச்சைக் கோதுமை மாவைக் கலந்து சுடும் பனங்காய்ப் பணியாரம் மென்மையானதாக இருக்கும். அவித்த கோதுமை மாவில் சுடும் பணியாரம் வன்மையானதாக இருக்கும். அதனால் பச்சைக் கோதுமை மாவையே பணியாரம் சுடப் பாவிக்க வேண்டும்.

பனங்காய்ப் பணியாரம் சுவையும் விற்பனைக் கவர்ச்சியும் உள்ள ஒரு பொருளாகும். இதனைச் சுற்றுலாப் பயணிகள் வரும் இடங்களில் வைத்து விற்று நிறைய வருமானம் ஈட்டலாம்.

வருடம் முழுவதும் பணியாரம் சுடக் கூடியதாகப் பனம் களியைப் பதப்படுத்திப் பாதுகாக்க முடியும்.

பனை அபிவிருத்திச் சபையின் கற்பகம் விற்பனைக் கூடங்களில் பனம்களியைப் பெறக்கூடியதாக உள்ளது.

வெளிமாவட்டங்களில் உள்ளோர் இந்தப் பனம் களியை வாங்கிச் சத்தும் சுவையுமுள்ள பனங்காய்ப் பணியாரங்களைச் சுட்டு உண்ணலாம். அல்லது வணிக நோக்கில் விற்றுக் காசாக்கலாம்.

பனங்காய்,பலாக்கொட்டை என்பன பருவத்தே கிடைக்கும் உணவு மூலப் பொருள்கள். பருவத்தே உணவாக்கிப் பணவருவாய் ஈட்டிக் கொள்ளுங்கள்.

# எதற்காக இந்தப் பொலித்தீன்?



வடகோவை வரதராஜன்

சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் காரணிகள் எவை? என்பதை முன்னைய பதிவில் சுருக்கமாகப் பார்த்தோம்.

இன்றைய பதிவில் சூழலை நாம் எவ்வாறு மாசுபடுத்துகிறோம் அதை எவ்வாறு குறைக்கலாம். என்பது பற்றிப் பார்ப்போம்.

இந்த நுகர்வுக் கலாச்சாரத்தில் இவை 100% சாத்தியமாதல் கடினமானது என்பது உண்மையானதுதான். முன்னோக்கிச் சுழலும் வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னோக்கிப் பயணிக்க வைக்க முடியாது என்பது உண்மையே.

ஆனாலும் இந்த முன்னோக்கிச் சுற்றும் வேகத்தை சற்று மட்டுப்படுத்தினால், அந்த இடைவெளியில் இயற்கை தன்னை புதுப்பித்துக் கொள்ளும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

1) பொலித்தீன் / பிளாஸ்டிக் பாவனையைக் குறைத்தல்.

இது எம்மளவில் நாம் செய்யக் கூடியதே.

கடைக்குப் போய் வரும்போது எல்லாம் எவ்வளவு பொலித்தீன் பைகளுடன் நாம் வீடு திரும்புகிறோம்.

பொருட்களை எடுத்துக் கொண்டு அந்தப் பொலித்தீன் பைகளை வீசி விடுகிறோம்.

இவை காற்றில் பறந்து கிணற்றில் வீழ்ந்து நீரை மாசுபடுத்துகின்றன.

கழிவுநீர்க் குழாய்களை அடைத்து நீரைத் தேங்கச் செய்கின்றன.

தெருவில் பறந்து வாகன ஓட்டிகளின் முகத்தில் விழுந்து விபத்தை உண்டாக்குகின்றன.

மின்சாரக் கம்பிகளில் சிக்குண்டு மின் தடையை ஏற்படுத்துகின்றன.

இவையெல்லாம் நாம் சாதாரணமாக காணும் காட்சிகள்.

இவற்றைக் கண்டபின்பும் நாம் திருந்துவதில்லை.

கடைக்குப் போகும்போது ஒரு துணிப் பையை எடுத்துச் செல்ல எமக்குப் பஞ்சி, அல்லது கௌரவக் குறைவு.

3000 ரூபாய்க்கு சாமான் வாங்குகிற நாங்கள் ஒரு 30 ரூபாய் கொடுத்து ஒரு சணல் பை வாங்கக் கணக்குப் பார்ப்போம்.

2) பிளாஸ்டிக் குவளைகளின் பாவனையைக் குறைத்தல்.

திருமண வீடு போன்ற விசேட நிகழ்வுகளில் பாயாசம் அருந்த இந்தப் பிளாஸ்டிக் குவளைகளே பாவிக்கப்படுகின்றன.

சூடான பாயாசத்தை இப்படியான பிளாஸ்டிக் குவளைகளில் அருந்துவது ஆபத்தானது. இந்த குவளைகளில் உள்ள தாலேற்று எனும் ராசயன நஞ்சு, சூட்டில் கரைந்து எமது குடலுக்குள் சென்று நோயை உண்டு பண்ணுகிறது.

நிகழ்வு முடிய, இந்தக் குவளைகள் மிகுதிப்பாயாசத்தோடு சேகரிக்கப்பட்டு மயானங்களிலோ, வேறு பொது இடங்களிலோ கொடப்படுகின்றன.

இதனுள் நீர் தேங்கி நுளம்பு பெருகுகிறது.

முன்னைய காலங்களைப் போல எவர்சில்வர் குவளைகளை பயன்படுத்துவதில் என்ன தயக்கம் எமக்கு?

திருமணத்துக்கு இவ்வளவு இலட்சம் செலவு செய்கின்ற நாம், ஒரு கூலி கொடுத்து இந்தக் குவளைகளைக் கழுவுவதற்கு கணக்குப் பார்ப்பது கருமித்தனம் அல்லவா?

அல்லது கமுகம்பாளையில் அழகாக செய்யப்பட்ட மட்கக்கூடிய குவளைகளைப் பயன்படுத்தலாம்.

லாவா வைத்தியசாலை யாழ்ப்பாணம் என்னும் நிறுவனம் தரமான கமுகமடல் சாப்பாட்டுத் தட்டுகளையும், குவளைகளைகளையும் உற்பத்தி செய்து வருகிறது. ஒருமுறை இவற்றை நாம் எமது நிகழ்வுக்குக்கு வாங்கி, ஓர் உள்ளூர் நிறுவனத்தின் உற்பத்தியை ஊக்குவித்தால் என்ன?

3) lunch sheet பாவனையை ஒழித்தல்

யாழ்ப்பாணத்தில் விசேட நிகழ்வுகளில் சாப்பாட்டுத் தட்டின் மேல் இந்த lunch sheet விரிக்கப்பட்டு அதன் மேலே உணவு பரிமாறப்படுகிறது.

முன்பு சொன்னமாதிரி சூடான உணவுகளை இந்த பொலித்தீன் sheet இல் போடும்போது இதில் உள்ள தாலேற்றுகள் கரைந்து உணவை நஞ்சாக்குகின்றன.

நிகழ்வு முடிய மிகுதி உணவுடன் பொது இடம்களில் கொட்டப்படும் இந்த lunch sheet ற்றுக்களை உண்ணும் எமது கால்நடைகளும், நாய்களும், காட்டு விலங்குகளும் இறக்கும் கொடுமையை தினசரி நாம் பத்திரிகைகளில் படிக்கிறோம்.

தற்போது lunch sheet இற்கு மாற்றீடாக, வட்டமாக வெட்டப்பட்ட வாழை இலைகள் பாவனைக்கு வந்தாலும், பல இடங்களிலும் பல கடைகளிலும் இந்த lunch sheet கலாச்சாரம் தொடரவே செய்கிறது. இதற்குப் பிரதியிடாக முன்னர் சொல்லப்பட்டதுபோல் கமுகமடல் தட்டுகளை பயன்படுத்தலாம்.

வெளி நாடுகளில் உணவகங்களில் நன்றாக கழுவிச் சுத்தம் செய்யப்பட்ட பீங்கான் தட்டுகளிலேயே உணவு பரிமாறப்படுவதாகவும், பின் அவை கழுவும் அறைக்கு எடுத்து செல்லப்பட்டு நன்கு கழுவி மீண்டும் பயன்பாட்டிற்கு வருவதாயும் அறிகிறேன்.

வெளி நாடுகளில் வசிக்கும் நண்பர் ஒருவரின் கைகளில் பல கீறல் அடையாளம்கள் காணப்பட்டபோது அது பற்றி விசாரித்தேன்.

தான் வைன் கிளாஸ் கழுவும் பகுதியில் வேலை செய்வதாகவும், வைன் கிளாஸ் உடையும் போது ஏற்பட்ட கீறல் காயங்கள் எனவும் கூறினார் .

இங்கு மது அருந்துபவர்கள் அநேகம் பேர் one day உரி எனப்படும் பிளாஸ்டிக் குவளைகளில் மதுவை ஊற்றி அருந்துகிறார்கள். மதுவருந்துவது தீமை என்றால், அதைவிடத் தீமை இந்தப் பிளாஸ்டிக் குவளைகளில் மது அருந்துவது. மதுவில் உள்ள அற்கஹோல் இலகுவில் இந்தக் குவளைகளின் உள்ள தாலேற்று நஞ்சைக் கரைத்து விடுகிறது.

மது அருந்தி முடித்தபின் இந்தக் குவளைகளை கையால் அமர்த்திப் பார்க்கும்போது இந்தக் குவளைகள் இலகுவில் நெகிழும் தன்மையில் இருந்து இந்த உண்மையைப் புரிந்துகொள்ளலாம்.

தமிழர் பொருளாதாரம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
09.07.2023



# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

1974ஆம் ஆண்டு ஒருநாள் சனிக்கிழமை வழக்கம் போல வெள்ளணக் காலமை நித்திரையால எழும்பி வளவுக்குப் போய் வந்து கைகால் முகம் எல்லாம் கழுவி சாமி கும்பிட்டுப் போட்டு ஆட்டடி மாட்டடி எல்லாம் துப்பரவாக்கிபோட்டுக் கோப்பி குடிக்க எண்டு அடுக்களைக்குப் போனன். ஒவ்வொரு நாளும் ஆச்சி மணக்க மணக்க வேர்க்கொம்பும் போட்டு ஆட்டுப்பாலிலை கோப்பி ஊத்துவா . அப்ப எங்களிட்டை நிண்ட தங்கம்மா எண்ட ஆடு ஆச்சி எப்ப போய் மடியைத் தொட்டாலும் சுண்டுக் கோப்பை நிறையப் பால் தரும். ஆச்சி ஊத்திற உந்தக் கோப்பியைக் குடிச்சா உடம்பிலை புதுசா ஒரு தெம்பு வரும் . அப்பிடி அண்டைக்கும் கோப்பி குடிக்க எண்டு போக வழக்கத்துக்கு மாறா தம்பி போய் குளிச்சுப் போட்டு வாடா எண்டு ஆச்சி சொன்னா.

ஏனணை ஆச்சி இண்டைக்குச் சனிக்கிழமைதானே வழக்கமா நான் பத்து மணிக்குத்தானே எண்ணை வைச்சு முழுகிறனான். பேந்து இண்டைக்கு என்னத்துக்கு ஒரு புதிவிதமா என்னை விடிய நேரத்தோட குளிக்கச் சொல்லிறியள் எண்டன் .உடனை ஆச்சி எடே இண்டைக்கு இஸ்கொலர்சிப்பு சோதினை இருக்கு போய் எழுதிப் போட்டு வா எண்டு சொன்னா. அப்பதான் எனக்குத் தெரியும் அப்பிடி ஒரு சோதினை அண்டைக்கு எனக்கு இருக்கெண்டு .

பேந்து வெள்ளிக்கிழமை பள்ளிக்கத்துக்குப் போட்டுப் போட்டு தோய்க்கவெண்டு கொடியில கழட்டிபோட்ட காச்சட்டை சட்டையைப் போட்டுக்கொண்டு தீட்டாத பென்சிலும் ரேசரும் செத்தையிலை செருகிக் கிடந்த பழைய மெய்கண்டான் கலண்டர் மட்டையும் எடுத்துக் கொண்டு காலுக்குச் செருப்பும் போடாமல் போய் ஒரு மாதிரிச் சோதினை எழுதிப் போட்டு வந்தனான். என்னோடை ஆச்சியோ அப்புவோ பின்னாலை வால் பிடிச்சுக்கொண்டும் வரேல்லை கண்டகிண்டபடி ஒண்டும் அலட்டவும் இல்லை. எண்டாலும் ஆச்சி போகேக்கை மோனை கவனம் இஞ்சுப் பெற்றர் வந்தால் சலாம் குண்டுமணி சொல்லவேணும் எண்டு வழிக்கு வழி சொல்லி அனுப்பினா. சோதினை செய்து போட்டு வந்த பிறகு ஆச்சி அந்தக் கேள்வி செய்தனியே இந்தக் கேள்வி செய்தனியே எண்டு அரியண்டப்படுத்தவும் இல்லை. அயலட்டையிலை உள்ள பெண்டுகளிட்டைப் போய் உன்ரை பெடி சோதினை வடிவாச் செய்ததோ உன்ரை பெட்டை சோதினை வடிவாச் செய்ததோ எண்டு அலட்டவும் இல்லை. அவ தன்ரை பாடு நான் என்ரை பாடு .

பேந்து ஒரு மூண்டு மாதம் கழிச்சு ரிசல்ட் வந்தால் நான் பெயில் ஆனால் எங்கட வகுப்பில ரெண்டு மூண்டு பேர் பாஸ் பண்ணிப் போட்டினம். நான் பெயில் எண்டு நானும் கவலைப்படேல்லை. அம்மாவும் கவலைப்படேல்லை, ஆச்சியும் கவலைப்படேல்லை. அயலட்டையில உள்ள ஆக்களும் அதைப் பற்றி ஒண்டும் விண்ணாயம் கேக்கேல்லை. வகுப்பில ரீச்சர்மாரும் ஒண்டும் கேக்கேல்லை . அவை பாஸ் பண்ணின பெடியளை தூக்கிவைச்சு கதைக்கவும் இல்லை விழாக் கொண்டாடவும் இல்லை .பெயில் பண்ணின என்னைப் போல பெடியளை குறைவாயும் கதைக்கேல்லை .

பேந்து நான் ஆப்பிடியே ஓ எல் படிச்சு பெஸ்ற் ரிசல்ட் எடுத்து அதுக்குப் பிறகு ஏ எல் படிச்சு பெஸ்ற் ரிசல்ட் எடுத்து கம்பஸ் போய் அதுக்குப் பிறகு இன்னும் மேல மேல அதையும் இதையும் எண்டு அந்தக் கம்பஸ் மாறி இந்தக் கம்பஸ் மாறி படிச்சு இந்த நாட்டின்ரை கல்வித்துறை சார்ந்து பல முடிவுகளை எடுக்கக் கூடிய நிலைமைக்கு எல்லாம் போனனான். அதே நேரம் என்னோட படிச்சு உந்தச் சோதினை பாஸ் பண்ணினவங்கள் இப்ப எங்க இருக்கிறாங்கள் எண்டே தெரியேல்லை.

5ஆம் வகுப்பு இஸ்கொலசிப்பு சோதினை பாஸ் பண்ணினவன் எல்லாம் அரசாளப் போவதுமில்லை அதே சோதினை பெயிலானவன் எல்லாம் அலைஞ்சு திரியப் போவது மில்லை.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.07.2023இல் வெளியிடப்பெற்றது.